உ
சிவமயம்

# குலமலர்

21.05.2016



## அமரர் சிற்றம்பலம் குலமணி

அவர்களின்

## சிவபதப்பேறுகுறித்த

# நினைவு மலர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



நவாலியைப் பிறப்பிடமாகவும்,
வசிப்பிடமாகவும் கொண்ட

# அமரர் திருமதி. சிற்றம்பலம் குலமணி

அவர்களின் சிவபதப்பேறு குறித்த

# குல மலர்

## 21.05.2016

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# காணிக்கை

எங்கள் இதய விளக்கே

என்றும் அருளொளி வீசி

ஆரத் தழுவினாய்

அணைத்து வளர்த்து ஆளாக்கினாய்

உங்கள் எழில் உருவம் இதயத்தில்

என்றும் சுடர்விட்டு ஒளி பெருக்கும்

உங்கள் திருவடிகளுக்கு

எங்கள் அன்புக் காணிக்கையாய்

இம்மலரை ஏற்று அருளுக!

என்றும் உங்கள் நினைவுகளோடு வாழும்

**குடும்பத்தினர்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

மண்ணகம்
12
.
08
.
1946

விண்ணகம்
21
.
04
.
2016



அமரர்

# சிற்றம்பலம் குலமணி

## திதி வெண்பா

ஆண்டான துன்முகி அணியார்ந்த சித்திரையில்
பூண்டதிரு பூர்வச் சதுர்த்தசியில் – வேண்டும்
திருமுருகன் திருவடியில் செம்மைக் குலமணி
பெருவாழ்வு பெற்றதைப் போற்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமதி. குலமணி சிற்றம்பலம் அவர்களின்
# வாழ்வில் சில சுவடுகள்

யாழ்ப்பாணக் குடாநாட்டில் மருதமும் நெய்தலும் மருவி மணம் பரப்பும் சைவம், கிறிஸ்தவம் ஆகிய மதங்கள் அறவழிகாட்டி நிற்க, சைவமணம் கமழும் ஒழுக்கம் நிறைந்த உயர்குடியில் சின்னத்தம்பி சின்னத்துரைக்கும் சரவணமுத்து செல்லம்மாவிற்கும் அவர்களின் குலம் விளங்க இனம் தழைக்க அவர்களுக்கு முதல் மகளும் தலைமகளுமாக அவர்களின் குலவிளக்காய் **12.08.1946**ம் ஆண்டு வந்துதித்த மகளுக்கு குலமணி என்றே பெயரிட்டனர். அம்மகளை தாலாட்டி சீராட்டி வளர்க்கும் காலை அவர்களுக்கு மல்லிகாதேவி, ஜெயராசா, ஜெயரஞ்சன், ஜெயக்குமார் என்னும் நால்வர் குலமணியின் சகோதரி, சகோதரர்களாகவும் வாய்த்தனர். பிள்ளைகளை வளர்ப்பதோடு மட்டும் நின்றுவிடாது உரிய காலத்தில் வேண்டிய கல்வியையும் பயிற்றுவித்து சிறப்புற வாழ்ந்தனர். இதனால் அவர்களின் முதல்மகளும் குலமகளுமாகிய குலமணி தனது கல்வியில் சாதாரணப் பரீட்சையில் சித்தியெய்தி தனது கல்வியைத் தொடருங்கால் நவாலியிலே சபாபதி வேலுப்பிள்ளைக்கும் நாகமுத்து என்பவருக்கும் மகனாகப் பிறந்து கல்வியிலும் கடவுள் பக்தியிலும் ஒழுக்கத்திலும் சிறந்து விளங்கி அரசாங்க வேலையில் கடமையாற்றிக் கொண்டிருந்த சிற்றம்பலம் என்பவரை தமது செல்வப்புதல்வி குலமணிக்கு வரனாக நிச்சயம் செய்தனர். அவர் தனது கணவராகப்போகின்றவரின் விருப்பத்திற்கிணங்கவே தனது கல்வியை மேற்கொண்டு தொடராது நிறுத்திக்கொண்டார்.

இதன்பின் சிறிதுகாலத்தில் குலமணியின் தந்தையார் திடீரென மாரடைப்பால் காலமாகிவிட **27.10.1965** அன்று பேசிவைத்தபடியே செல்வி குலமணிக்கும் சிற்றம்பலத்திற்கும் திருமணம் நடைபெற்றது. அவர்களும் தங்கள் வாழ்க்கைப்பயணத்தை தங்கள் குலதெய்வமாகிய அந்திரான்பதி அழகன் முருகனின் ஆசீர்வாதத்துடனும் பெரியோர்களின் ஆசியுடனும் ஆரம்பித்தனர். அக்காலத்தில் குலமணியின் கணவர் சிற்றம்பலம் கண்டியில் பணியாற்றியமையால் அவர்களின் வாழ்க்கையும் கண்டியிலே ஆரம்பமாகியது. அடுத்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்டு ஐப்பசி மாதம் **27ம்** திகதியே அவர்களது முதல்மகன் பிறந்தார். அவருக்கு சரவணன் என்று பெயரிட்டனர். பின்னர் **31.01.1969** இல் இரண்டாவது மகன் புவனேந்திரனையும் **06.06.1971** இல் மூன்றாவது மகன் ரவீந்திரனையும் **20.03.1974** இல் முதல் பெண்குழந்தையாக மாதினியையும் **27.07.1976** இல் கடைசி மகளாகிய நளாயினியையும் பெற்றெடுத்தனர். தந்தையார் தனது அரச உத்தியோகம் கருதி கொழும்பு, கண்டி, மன்னார், முல்லைத்தீவு எனப் பல ஊர்களில் பணிபுரிந்தாலும் தாயாக விளங்கிய திருமகளாம் குலமணி தனது குழந்தைச் செல்வங்களை கண்ணும் கருத்துமாய்ப் பார்த்து அவர்களின் கல்வியிலோ அல்லது வேறு எதிலுமோ குறைவராது வாழ்ந்து வந்தார். கணவர் மாதந்தோறுமோ அல்லது வாரம்தோறுமோ வருகை தந்து குடும்பத்தைக் கண்ணும் கருத்துமாக வழிநடத்திச் செல்ல கணவருக்கு ஏற்ற பத்தினியாக தங்கள் சுற்றம் சொந்தங்களுடனும் உறவுகளுடனும் அன்பாகவும் அந்நியோன்யமாகவும் கணவன் காட்டும் வழி செல்பவராக வாழ்ந்து வந்தார். தாய், தந்தையார் இருவரும் தங்கள் குழந்தைகளின் கல்வியில் கண்ணும் கருத்துமாக இருந்தமையினால் அவர்களது முதல் மகனாகிய சரவணன் பல்கலைக்கழக புகுமுகப்பரீட்சையில் மருத்துவக்கல்விக்குத் தெரிவாகி அதன்பின் இன்று மகப்பேற்று நிபுணராக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் பணி புரிகின்றார்.

இரண்டாவது மகன் பட்டதாரியாகி இன்று முல்லைத்தீவில் நன்னடத்தை உத்தியோகத்தராகப் பணிபுரிகின்றார். இவரது மனைவி தயாழினி யாழ்ப்பாணம் நீதிமன்றில் சுருக்கெழுத்தாளராகப் பணிபுரிகின்றார். வெளிநாட்டு மோகம் யாரையும் விட்டு வைக்கவில்லை என்பதற்கிணங்க மூன்றாவது மகனாகிய இரவீந்திரன் பிரான்ஸ் சென்று சிலகாலம் வசித்துப் பின்னர் தற்போது லண்டனில் சிறப்புற வாழ்கின்றார். மூத்தமகளாகிய மாதினி தனது சொந்த மைத்துனரை விவாகஞ்செய்து பிரான்சில் வசிக்கிறார். கடைசி மகள் நளாயினி தனது பல்கலைக்கழகக் கல்வியை இடைநிறுத்தி தான் விரும்பியவரின் வேண்டுகோளுக்கு அமைய இன்று அவருடன் லண்டனில் சிறப்புற வாழ்கின்றார். பிள்ளைகளின் திருமணங்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போதும் அவர்களின் மகப்பேற்றின் போதும் தாயார் குலமணியும் தகப்பனும் இந்தியா, பாங்கொக், சிங்கப்பூர், பிரான்ஸ், லண்டன் எனப் பல நாடுகளுக்கும் சென்று அவர்களின் கடமைகளைச் சரிவரச் செய்து அவர்களோடு அந்தந்த நாடுகளில் தங்கியிருந்து சுற்றுலாப்பயணிகள் போல மிகவும் சிறப்புடனும் பெருமையுடனும் வாழ்ந்து வந்தனர். குலமணி கணவர் காட்டிய வழியில் சமூகத்திற்கு ஓர் எடுத்துக்காட்டான சிறந்த குடும்பத் தலைவியாகவும் குடும்பத்தின் குலவிளக்காகவும் விளங்கினார். மேலும் திருமதி குலமணியும் அவரது கணவர் சிற்றம்பலமும் 27.10.2015ம் ஆண்டு தங்கள் 50வது திருமண நாளை வெகுசிறப்பாகவும் சந்தோசமாகவும் கொண்டாடினார்.

இதன்பின் 2016ம் ஆண்டு புதுவருடப்பிறப்பு முடிந்த கையோடு திருமதி குலமணி வருடப்பிறப்பிற்கு வீடு வந்த தனது மூத்தமகன் காரிலேயே 15.04.2016ல் தனது மூத்தமகனால் நடாத்தப்பட இருந்த விசேட நிகழ்வொன்றில் கலந்து கொள்வதற்காக மட்டக்களப்பு சென்று அங்கிருந்து மீண்டும் 21.04.2016ம் திகதியன்று அதிகாலை 5.30 மணிக்கு மகனுடன் அவரது மகனின் கொழும்பு வீட்டை அடைந்தார். வீட்டை அடைந்தவர் அவரது வீட்டுப் படியில் ஏற முன்னரே விழுந்து மகனது மடியிலேயே தனது இன்னுயிரை நீத்தார். கணவர், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள் கதறவும் அவர் ஏன் என்று கேளாது தனது இன்னுயிரை நீத்து இறைவனடி சேர்ந்தார். அவரது ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஐயிரண்டு திங்களா யங்கமெலாம் நொந்துபெற்றுப்
பையலென்ற போதே பரிந்தெடுத்துச் – செய்யவிரு
கைப்புறத்தி லேந்திக் கனகமுலை தந்தாளை
எப்பிறப்பிற் காண்பே னினி.

(பட்டினத்தார்)

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



# தோத்திர மாலை

## விநாயகர் துதி

**திருச்சிற்றம்பலம்**

வேழமுகத்து விநாயகனைத் தொழ வாழ்வு மிகுத்து வரும்
வெள்ளைக் கொம்பன் விநாயகனைத் தொழ துள்ளி ஓடும் தொடர்ந்த வினைகளே.

## தேவாரம்

வானவன்காண் வானவர்க்கு மேலா னான்காண்
வடமொழியுந் தென்றமிழும் மறைகள் நான்கும்
ஆனவன்காண் ஆனைந்தும் ஆழ னான்காண்
ஐயன்காண் கையிலனல் ஏந்தி யாடும்
கானவன்காண் கானவனுக் கருள்செய் தான்காண்
கருதுவார் இதயத்துக் கமலத் தூறும்
தேனவன்காண் சென்றடையாச் செல்வன் றான்காண்
சிவனவன்காண் சிவபுரத்தெஞ் செல்வன்தானே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசகம்

சிந்தனைநின் றனக்காக்கி நாயி னேன்றன்
கண்ணிணைநின் திருப்பாதப் போதுக் காக்கி
வந்தனையும் அம்மலர்க்கே யாக்கி வாக்குன்
மணிவார்த்தைக் காக்கியைம் புலன்கள் ஆர
வந்தனைஆட் கொண்டுள்ளே புகுந்த விச்சை
மாலமுதப் பெருங்கடலே மலையே உன்னைத்
தந்தனைசெந் தாமரைக்கா டனைய மேனித்
தனிச்சுடரே இரண்டுமிலித் தனிய னேற்கே.

## திருவிசைப்பா

பூதமும் கரணம் பொறிக ளைம்புலனும் பொருந்திய குணங்களோர் மூன்றும்
நாதமும் கடந்த வெளியிலே நீயு நானுமாய் நிற்கும்நா ளுளதோ
வாதமுஞ் சமயபேதமுங் கடந்த மனோலய வின்பசா கரமே
ஏதுமொன்றறியேன் யாது நின்செயலோ இறைவனே யேகநாயகனே.

## திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டி அழுதிடப்பாற்கடல் ஈந்தபிரான்
மாலுக்குச் சக்கரம் அன்றுஅருள் செய்தவன் மன்னிய தில்லைதன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற சிற்றம்பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயிலவல் லானுக்கே பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

தேவர்கள் தேவே ஓலம் சிறந்த சிற்பரனே ஓலம்
மேலவர்க் கிடியே ஓலம் வேற்றுடை விமலா ஓலம்
பாவலர்க்கு எழியர் ஓலம் பரஞ்சுடர் முதலே ஓலம்
மூவரும் ஆகிநின்ற மூர்த்தியே ஓலம் ஓலம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## திருப்புகழ்

இசைந்த ஏறும் கரியுரி போர்வையு எழில் நீறும்
இலங்கு நூலும் புலியத ளாடையும் மழுமானும்
அசைந்ததோடுஞ் சிரமணி மாலையும் முடிமீதே.
அணிந்த ஈசர் பரிவுடன் மேவிய குருநாதா
உகந்த சூரன் கிளையுடன் வேரற முனிவோனே
உகந்த பாசக் கயிறொடு தூதுவர் நலியாது
அசைந்த போதென் துயர் கெட மாமயில் வரவேணும்
அமைந்த வேலும் புயமிசை மேவிய பெருமாளே.

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ்சுரக்க மன்னன்
கோன்முறை யரசு செய்க குறைவிலாதுயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

திருச்சிற்றம்பலம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிவபுராணம்

*திருச்சிற்றம்பலம்*

தொல்லை யிரும்பிறவிச் சூழும் தளைநீக்கி
அல்லலறுத் தானந்த மாக்கியதே - எல்லை
மருவா நெறியளிக்கும் வாதவூ ரெங்கோன்
திருவா சகமென்னும் தேன்.

நமச்சிவாய வாழ்க! நாதன்தாள் வாழ்க!
இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க
கோகழி யாண்ட குருமணிதன் தாள்வாழ்க
ஆகம மாகிநின் றண்ணிப்பான் தாள்வாழ்க
ஏகன் அநேகன் இறைவ னடி வாழ்க

வேகங் கெடுத்தாண்ட வேந்தனடி வெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்றன் பூங்கழல்கள் வெல்க
கரங்குவிவார் உண்மகிழுங் கோன்கழல்கள் வெல்க
சிரங்குவிவார் ஓங்குவிக்குஞ் சீரோன் கழல்வெல்க

ஈச னடிபோற்றி எந்தை யடிபோற்றி
தேச னடிபோற்றி சிவன்சே வடிபோற்றி
நேயத்தே நின்ற நிமல னடிபோற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்ன னடிபோற்றி
சீரார் பெருந்துறைநந் தேவ னடிபோற்றி

ஆராத இன்பம் அருளுமலை போற்றி
சிவனவனென் சிந்தையுள் நின்ற அதனால்
அவனரு ளாலே அவன்றாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுரா ணந்தன்னை
முந்தை வினைமுழுது மோய உரைப்பன்யான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணுதலான் தன்கருணை கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற் கெட்டா எழிலார் கழலிறைஞ்சி
விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளங்கொளியாய்
எண்ணிறந் தெல்லை இலாதானே நின்பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமா றொன்றறியேன்

புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லா நின்றவித் தாவர சங்கமத்துள்

எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்
மெய்யேயுன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்யவென் னுள்ளத்துள் ஓங்கார மாய்நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா எனவோங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே

வெய்யாய் தணியாய் இயமானன் ஆம்விமலா
பொய்யா யினவெல்லாம் போயகல வந்தருளி
மெய்ஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞான மில்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானந் தன்னை அகல்விக்கும் நல்லறிவே

ஆக்கம் அளவிறுதி யில்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள்தருவாய்
போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின்றொழும்பின்
நாற்றத்தின் நேரியாய் சேயாய் நணியானே
மாற்றம் மனங்கழிய நின்ற மறையோனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்களோ ரைந்துடையாய் விண்ணோர்க ளேத்த
மறைந்திருந்தாய் எம்பெருமான் வல்வினையேன் தன்னை

மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவ மென்னும் அருங்கயிற்றாற் கட்டிப்
புறந்தோல்போர்த் தெங்கும் புழுவழுக்கு மூடி
மலஞ்சோரும் ஒன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய

விலங்கு மனத்தால் விமலா உனக்குக்
கலந்தவன் பாகிக் கசிந்துள் உருகும்
நலந்தான் இலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காஅட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்

தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேனா ரமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள்புரிந்து நெஞ்சில்வஞ் சங்கெடப்

பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா அமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதார் உள்ளத் தொளிக்கும் ஒளியானே
நீராய் உருக்கியென் ஆருயிராய் நின்றானே
இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பருக் கன்பனே யாவையுமாய் அல்லையுமாம்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே
ஈர்த்தென்னை யாட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்தமெய்ஞ் ஞானத்தாற் கொண்டுணர்வார் தங்கருத்தின்

நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே
காக்குமெங் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தாமிக் காய்நின்ற
தோற்றச் சுடரொளியாய்ச் சொல்லாத நுண்ணுணர்வாய்

மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவேயென் சிந்தனையுள்
ஊற்றான உண்ணா ரமுதே உடையானே
வேற்று விகார விடக்குடம்பி னுட்கிடப்ப
ஆற்றேனெம் ஐயா அரனேயோ என்றென்று

போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பைக் கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையுட் கூத்தனே தென்பாண்டி நாட்டானே

அல்லற் பிறவி அறுப்பானே ஓவென்று
சொல்லற் கரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தி னுள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து.

*திருச்சிற்றம்பலம்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# திருவெம்பாவை

ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ்
சோதியை யாம்பாடக் கேட்டேயும் வாட்டடங்கண்
மாதே வளருதியோ வன்செவியோ நின்செவிதான்
மாதேவன் வார்கழல்கள் வாழ்த்தியவாழ்த் தொலிபோய்
வீதிவாய்க் கேட்டலுமே விம்மிவிம்மி மெய்ம்மறந்து
போதா ரமளியின்மேல் நின்றும் புரண்டிங்ஙன்
ஏதேனு மாகாள் கிடந்தாளென் னேயென்னே
ஈதே எந்தோழி பரிசேலோ ரெம்பாவாய். 01

பாசம் பரம்சோதிக் கென்பாய் இராப்பகல்நாம்
பேசும்போ தெப்போதிப் போதா ரமளிக்கே
நேசமும் வைத்தனையோ நேரிழையாய் நேரிழையீர்
சீசீ யிவையுஞ் சிலவோ விளையாடி
ஏசு மிடமீதோ விண்ணோர்க ளேத்துதற்குக்
கூசு மலர்ப்பாதந் தந்தருள வந்தருளுந்
தேசன் சிவலோகன் தில்லைச்சிற் றம்பலத்துள்
ஈசனார்க் கன்பார்யாம் ஆரேலோ ரெம்பாவாய். 02

முத்தன்ன வெண்ணகையாய் முன்வந் தெதிரெழுந்தென்
அத்தனா னந்தன் அமுதன்என் றள்ளூறித்
தித்திக்கப் பேசுவாய் வந்துன் கடைதிறவாய்
பத்துடையீர் ஈசன்பழ வடியீர் பாங்குடையீர்
புத்தடியோம் புன்மைதீர்த் தாட்கொண்டாற் பொல்லாதோ
எத்தோநின் அன்புடைமை எல்லோம் அறியோமோ
சித்தம் அழகியார் பாடாரோ நஞ்சிவனை
இத்தனையும் வேண்டும் எமக்கேலோ ரெம்பாவாய். 03



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒண்ணித் திலநகையாய் இன்னம் புலர்ந்தின்றோ
வண்ணக் கிளிமொழியார் எல்லாரும் வந்தாரோ
எண்ணிக்கொ டுள்ளவா சொல்லுகோம் அவ்வளவும்
கண்ணைத் துயின்றவமே காலத்தைப் போக்காதே
விண்ணுக் கொருமருந்தை வேத விழுப்பொருளைக்
கண்ணுக் கினியானைப் பாடிக் கசிந்துள்ளம்
உண்ணெக்கு நின்றுருக யாம்மாட்டோம் நீயேவந்
தெண்ணிக் குறையில் துயிலேலோ ரெம்பாவாய். 04

மாலறியா நான்முகனுங் காணா மலையினைநாம்
போலறிவோம் என்றுள்ள பொக்கங்க ளேபேசும்
பாலூறு தேன்வாய்ப் படிறீ கடைதிறவாய்
ஞாலமே விண்ணே பிறவே அறிவரியான்
கோலமும் நம்மைஆட் கொண்டருளிக் கோதாட்டுஞ்
சீலமும் பாடிச் சிவனே சிவனேயென்
றோலம் இடினும் உணராய் உணராய்காண்
ஏலக் குழலி பரிசேலோ ரெம்பாவாய். 05

மானேநீ நென்னலை நாளைவந் துங்களை
நானே யெழுப்புவன் என்றலும் நாணாமே
போன திசைபகராய் இன்னம் புலர்ந்தின்றோ
வானே நிலனே பிறவே அறிவரியான்
தானேவந் தெம்மைத் தலையளித்தாட் கொண்டருளும்
வான்வார் கழல்பாடி வந்தோர்க்குன் வாய்திறவாய்
ஊனே உருகாய் உனக்கே உறுமெமக்கும்
ஏனோர்க்குந் தங்கோனைப் பாடேலோ ரெம்பாவாய். 06



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னே இவையுஞ் சிலவோ பலவமரர்
உன்னற்கரியான் ஒருவன் இருஞ்சீரான்
சின்னங்கள் கேட்பச் சிவனென்றே வாய்திறப்பாய்
தென்னாவென் னாமுன்னம் தீசேர் மெழுகொப்பாய்
என்னானை என்னரையன் இன்னமுதென் றெல்லோமும்
சொன்னோங்கேள் வெவ்வேறாய் இன்னந் துயிலுதியோ
வன்னெஞ்சப் பேதையர்போல் வாளா கிடத்தியால்
என்னே துயிலின் பரிசேலோ ரெம்பாவாய். 07

கோழி சிலம்பச் சிலம்புங் குருகெங்கும்
ஏழி ல் இயம்ப இயம்பும்வெண் சங்கெங்கும்
கேழில் பரஞ்சோதி கேழில் பரங்கருணை
கேழில் விழுப்பொருள்கள் பாடினோம் கேட்டிலையோ
வாழியீ தென்ன உறக்கமோ வாய்திறவாய்
ஆழியான் அன்புடைமை ஆமாறும் இவ்வாறோ
ஊழி முதல்வனாய் நின்ற ஒருவனை
ஏழைபங் காளனையே பாடேலோ ரெம்பாவாய். 08

முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப் பழம்பொருளே
பின்னைப் புதுமைக்கும் பேர்த்துமப் பெற்றியனே
உன்னைப் பிரானாகப் பெற்றவுன் சீரடியோம்
உன்னடியார் தாள்பணிவோம் ஆங்கவர்க்கே பாங்காவோம்
அன்னவரே எங்கணவ ராவார் அவருகந்து
சொன்ன பரிசே தொழும்பாய்ப் பணிசெய்வோம்
இன்ன வகையே எமக்கெங்கோன் நல்குதியேல்
என்ன குறையும் இலோமேலோ ரெம்பாவாய். 09



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதாளம் ஏழினுங்கீழ் சொற்கழிவு பாதமலர்
போதார் புனைமுடியும் எல்லாப் பொருள்முடிவே
பேதை ஒருபால் திருமேனி ஒன்றல்லன்
வேதமுதல் விண்ணோரும் மண்ணும் துதித்தாலும்
ஓத உலவா ஒருதோழன் தொண்டருளன்
கோதில் குலத்தரன்றன் கோயிற் பிணாப்பிள்ளைகாள்
ஏதவன்ஊர் ஏதவன்பேர் ஆருற்றார் ஆரயலார்
ஏதவனைப் பாடும் பரிசேலோ ரெம்பாவாய். 10

மொய்யார் தடம்பொய்கை புக்கு முகேரென்னக்
கையாற் குடைந்து குடைந்துன் கழல்பாடி
ஐயா வழியடியோம் வாழ்ந்தோங்காண் ஆரழல்போல்
செய்யாவெண் ணீறாடி செல்வா சிறுமருங்குல்
மையார் தடங்கண் மடந்தை மணவாளா
ஐயாநீ ஆட்கொண் டருளும் விளையாட்டின்
உய்வார்கள் உய்யும் வகையெல்லாம் உய்ந்தொழிந்தோம்
எய்யாமற் காப்பாய் எமையேலோ ரெம்பாவாய். 11

ஆர்த்த பிறவித் துயர்கெடநாம் ஆர்த்தாடுந்
தீர்த்தனற் றில்லைச்சிற் றம்பலத்தே தீயாடும்
கூத்தனிவ் வானும் குவலயமும் எல்லோமும்
காத்தும் படைத்தும் கரந்தும் விளையாடி
வார்த்தையும் பேசி வளைசிலம்ப வார்கலைகள்
ஆர்ப்பரவஞ் செய்ய அணிகுழல்மேல் வண்டார்ப்பப்
பூத்திகழும் பொய்கை குடைந்துடையான் பொற்பாதம்
ஏத்தி இருஞ்சுனைநீ ராடேலோ ரெம்பாவாய். 12



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பைங்குவளைக் கார்மலரால் செங்கமலப் பைம்போதால்
அங்கங் குருகினத்தால் பின்னும் அரவத்தால்
தங்கள் மலங்கழுவு வார்வந்து சார்தலினால்
எங்கள் பிராட்டியும் எங்கோனும் போன்றிசைந்த
பொங்கு மடுவிற் புகப்பாய்ந்து பாய்ந்துநம்
சங்கஞ் சிலம்பச் சிலம்பு கலந்தார்ப்பக்
கொங்கைகள் பொங்கக் குடையும் புனல்பொங்கப்
பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய். 13

காதார் குழையாடப் பைம்பூண் கலனாடக்
கோதை குழலாட வண்டின் குழாமாடச்
சீதப் புனலாடிச் சிற்றம் பலம்பாடி
வேதப் பொருள்பாடி அப்பொருளா மாபாடிச்
சோதி திறம்பாடிச் சூழ்கொன்றைத் தார்பாடி
ஆதி திறம்பாடி அந்தமா மாபாடிப்
பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளைதன்
பாதத் திறம்பாடி ஆடேலோ ரெம்பாவாய். 14

ஓரொருகால் எம்பெருமான் என்றென்றே நம்பெருமான்
சீரொருகால் வாயோவாள் சித்தங் களிகூர
நீரொருகால் ஓவா நெடுந்தாரை கண்பனிப்பப்
பாரொருகால் வந்தனையாள் விண்ணோரைத் தான்பணியாள்
பேரரையற் கிங்ஙனே பித்தொருவர் ஆமாறும்
ஆரொருவர் இவ்வண்ணம் ஆட்கொள்ளும் வித்தகர்தாள்
வாருருவப் பூண்முலையீர் வாயார நாம்பாடி
ஏருருவப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய். 15



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னிக் கடலைச் சுருக்கி யெழுந்துடையாள்
என்னத் திகழ்ந்தெம்மை ஆளுடையாள் இட்டிடையின்
மின்னிப் பொலிந்தெம் பிராட்டி திருவடிமேற்
பொன்னஞ் சிலம்பிற் சிலம்பித் திருப்புருவம்
என்னச் சிலைகுலவி நந்தம்மை ஆளுடையாள்
தன்னிற் பிரிவிலா எங்கோமான் அன்பர்க்கு
முன்னி அவள்நமக்கு முன்சுரக்கும் இன்னருளே
என்னப் பொழியாய் மழையேலோ ரெம்பாவாய். 16

செங்க ணவன்பாற் திசைமுகன்பாற் தேவர்கள்பால்
எங்கும் இலாததோர் இன்பம்நம் பாலதாக்
கொங்குண் கருங்குழலி நந்தம்மைக் கோதாட்டி
இங்குநம் இல்லங்கள் தோறும் எழுந்தருளிச்
செங்கமலப் பொற்பாதந் தந்தருளுஞ் சேவகனை
அங்கண் அரசை அடியோங்கட் காரமுதை
நங்கள் பெருமானைப் பாடி நலந்திகழப்
பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய். 17

அண்ணா மலையான் அடிக்கமலஞ் சென்றிறைஞ்சும்
விண்ணோர் முடியின் மணித்தொகைவீ றற்றாற்போல்
கண்ணார் இரவி கதிர்வந்து கார்கரப்பத்
தண்ணார் ஒளிமழுங்கித் தாரகைகள் தாமகலப்
பெண்ணாகி ஆணாய் அலியாய்ப் பிறங்கொளிசேர்
விண்ணாகி மண்ணாகி இத்தனையும் வேறாகிக்
கண்ணா ரமுதமுமாய் நின்றான் கழல்பாடிப்
பெண்ணேயிப் பூம்புனல்பாய்ந்தாடேலோ ரெம்பாவாய். 18



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்கையிற் பிள்ளை உனக்கே அடைக்கலஎன்
றங்கப் பழஞ்சொற் புதுக்குமெம் அச்சத்தால்
எங்கள் பெருமான் உனக்கொன் றுரைப்போங்கேள்
எங்கொங்கை நின்னன்ப ரல்லார்தோள் சேரற்க
எங்கை உனக்கல்லா தெப்பணியுஞ் செய்யற்க
கங்குல் பகலெங்கண் மற்றொன்றுங் காணற்க
இங்கிப் பரிசே யெமக்கெங்கோன் நல்குதியேல்
எங்கெழிலென் ஞாயி றெமக்கேலோ ரெம்பாவாய். 19

போற்றி அருளுகநின் ஆதியாம் பாதமலர்
போற்றி அருளுகநின் அந்தமாஞ் செந்தளிர்கள்
போற்றியெல் லாவுயிர்க்குந் தோற்றமாம் பொற்பாதம்
போற்றியெல் லாவுயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள்
போற்றியெல் லாவுயிர்க்கும் ஈறாம் இணையடிகள்
போற்றிமால் நான்முகனுங் காணாத புண்டரிகம்
போற்றியா முய்யவாட் கொண்டருளும் பொன்மலர்கள்
போற்றியாம் மார்கழிநீ ராடேலோ ரெம்பாவாய். 20

# திருவம்மானை

செங்கண் நெடுமாலுஞ் சென்றிடந்துங் காண்பரிய
பொங்கு மலர்ப்பாதம் பூதலத்தே போந்தருளி
எங்கள் பிறப்பறுத்திட் டெந்தரமும் ஆட்கொண்டு
தெங்கு திரள்சோலைத் தென்னன் பெருந்துறையான்
அங்கணன் அந்தணனாய், அறைகூவி வீடருளும்
அங்கருணை வார்கழலே பாடுதுங்காண் அம்மானாய். 01



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரார் விசும்புள்ளார் பாதாளத் தார்புறத்தார்
ஆராலும் காண்டற் கரியான் எமக்கெளிய
பேராளன் தென்னன் பெருந்துறையான் பிச்சேற்றி
வாரா வழியருளி வந்தென் உளம்புகுந்த
ஆரா அமுதாய் அலைகடல்வாய் மீன்விசிறும்
பேராசை வாரியனைப் பாதுடுங்காண் அம்மானாய். 02

இந்திரனும் மாலயனும் ஏனோரும் வானோரும்
அந்தரமே நிற்கச் சிவனவனி வந்தருளி
எந்தரமும் ஆட்கொண்டு தோட்கொண்ட நீற்றனாய்ச்
சிந்தனையை வந்துருக்குஞ் சீரார் பெருந்துறையான்
பந்தம் பறியப் பரிமேற்கொண் டான்தந்த
அந்தமிலா ஆனந்தம் பாடுதுங்காண் அம்மானாய். 03

வான்வந்த தேவர்களும் மாலயனோ டிந்திரனுங்
கானின்று வற்றியும் புற்றெழுந்துங் காண்பரிய
தான்வந்து நாயேனைத் தாய்போல் தலையளித்திட்
டூன்வந் துரோமங்கள் உள்ளே உயிர்ப்பெய்து
தேன்வந் தமுதின் தெளிவி னொளிவந்த
வான்வந்த வார்கழலே பாடுதுங்காண் அம்மானாய். 04

கல்லா மனத்துக் கடைப்பட்ட நாயேனை
வல்லாளன் தென்னன் பெருந்துறையான் பிச்சேற்றி
கல்லைப் பிசைந்து கனியாக்கித் தன்கருணை
வெள்ளத் தழுத்தி வினைகடிந்த வேதியனைத்
தில்லை நகர்புக்குச் சிற்றம் பலம்மன்னும்
ஒல்லை விடையானைப் பாடுதுங்காண் அம்மானாய். 05



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேட்டாயோ தோழி கிறிசெய்த வாறொருவன்
தீட்டார் மதில்புடைசூழ் தென்னன் பெருந்துறையான்
காட்டா தனவெல்லாங் காட்டிச் சிவங்காட்டித்
தாட்டா மரைகாட்டித் தன்கருணைத் தேன்காட்டி
நாட்டார் நகைசெய்ய நாம்மேலை வீடெய்த
ஆட்டான்கொண் டாண்டவா பாடுதுங்காண் அம்மானாய். 06

ஓயாதே உள்குவார் உள்ளிருக்கும் உள்ளானைச்
சேயானைச் சேவகனைத் தென்னன் பெருந்துறையின்
மேயானை வேதியனை மாதிருக்கும் பாதியனை
நாயான நந்தம்மை ஆட்கொண்ட நாயகனைத்
தாயான தத்துவனைத் தானே உலகேழும்
ஆயானை ஆள்வானைப் பாடுதுங்காண் அம்மானாய். 07

பண்சுமந்த பாடற் பரிசு படைத்தருளும்
பெண்சுமந்த பாகத்தன் பெம்மான் பெருந்துறையான்
விண்சுமந்த கீர்த்தி வியன்மண்ட லத்தீசன்
கண்சுமந்த நெற்றிக் கடவுள் கலிமதுரை
மண்சுமந்து கூலிகொண் டக்கோவால் மொத்துண்டு
புண்சுமந்த பொன்மேனி பாடுதுங்காண் அம்மானாய். 08

துண்டப் பிறையான் மறையான் பெருந்துறையான்
கொண்ட புரிநூலான் கோலமா ஊர்தியான்
கண்டங் கரியான்செம் மேனியான் வெண்ணீற்றான்
அண்டமுத லாயினான் அந்தமிலா ஆனந்தம்
பண்டைப் பரிசே பழவடியார்க் கீந்தருளும்
அண்டம் வியப்புறுமா பாடுதுங்காண் அம்மானாய். 09



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விண்ணாளுந் தேவர்க்கு மேலாய வேதியனை
மண்ணாளும் மன்னவர்க்கு மாண்பாகி நின்றானைத்
தண்ணார் தமிழளிக்குந் தண்பாண்டி நாட்டானை
பெண்ணாளும் பாகனைப் பேணு பெருந்துறையிற்
கண்ணார் கழல்காட்டி நாயேனை ஆட்கொண்ட
அண்ணா மலையானைப் பாடுதுங்காண் அம்மானாய். 10

செப்பார் முலைபங்கன் தென்னன் பெருந்துறையான்
தப்பாமே தாளாடைந்தார் நெஞ்சுருக்குந் தன்மையினான்
அப்பாண்டி நாட்டைச் சிவலோகம் ஆக்குவித்த
அப்பார் சடையப்பன் ஆனந்த வார்கழலே
ஒப்பாக ஒப்புவித்த உள்ளத்தா ருள்ளிருக்கும்
அப்பாலைக் கப்பாலைப் பாடுதுங்காண் அம்மானாய். 11

மைப்பொலியுங் கண்ணிகேள் மாலாயனோ டிந்திரனும்
எப் பிறவி யுந்தேட என்னையுந்தன் இன்னருளால்
இப்பிறவி ஆட்கொண் டினிப்பிறவா மேகாத்து
மெய்ப்பொருட்கண் தோற்றமாய் மெய்யே நிலைபேறாய்
எப் பொருட்குந் தானேயாய் யாவைக்கும் வீடாகும்
அப்பொருளாம் நம்சிவனைப் பாடுதுங்காண் அம்மானாய். 12

கையார் வளைசிலம்பக் காதார் குழையாட
மையார் குழல்புரளத் தேன்பாய வண்டொலிப்பச்
செய்யானை வெண்ணீ றணிந்தானைச் சேர்ந்தறியாக்
கையானை எங்குஞ் செறிந்தானை அன்பர்க்கு
மெய்யானை அல்லாதார்க் கல்லாத வேதியனை
ஐயா றமர்ந்தானைப் பாடுதுங்காண் அம்மானாய். 13



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனையாய்க் கீடமாய் மானிடர் ஆய் தேவர் ஆய்
ஏனைப் பிறவாய்ப் பிறந்திறந் தெய்த்தேனை
ஊனையும் நின்றுருக்கி என்வினையை ஓட்டுகந்து
தேனையும் பாலையுங் கன்னலையும் ஒத்தினிய
கோனவன்போல் வந்தென்னைத் தன்தொழும்பிற் கொண்டருளும்
வானவன் பூங்கழலே பாடுதுங்காண் அம்மானாய். 14

சந்திரனைத் தேய்த்தருளித் தக்கன்றன் வேள்வியினில்
இந்திரனைத் தோள்நெரித்திட் டெச்சன் தலையரிந்
தந்தரமே செல்லும் அலர் கதிரோன் பல் தகர்த்து
சிந்தித் திசை திசையே தேவர்களை ஓட்டு உகந்த
செம் தார்ப் பொழில் புடைசூழ் தென்னன் பெருந்துறையான்
மந்தார மாலையே பாடுதும் காண் அம்மானாய். 15

ஊனாய், உயிராய், உணர்வாயென் னுட்கலந்து
தேனாய் அமுதமுமாய்த் தீங்கரும்பின் கட்டியுமாய்
வானோரறியா வழியெமக்குத் தந்தருளுந்
தேனார் மலர்கொன்றைச் சேவகனார் சீரொளிசேர்
ஆனா அறிவாய் அளவிறந்த பல்லுயிர்க்கும்
கோனாகி நின்றவா கூறுதுங்காண் அம்மானாய். 16

சூடுவேன் பூங்கொன்றை சூடிச் சிவன்திரள்தோள்
கூடுவேன் கூடி முயங்கி மயங்கிநின்
றூடுவேன் செவ்வாய்க் குருகுவேன் உள்ளுருகித்
தேடுவேன் தேடிச் சிவன்கழலே சிந்திப்பேன்
வாடுவேன் பேர்த்து மலர்வேன் அனலேந்தி
ஆடுவான் சேவடியே பாடுதுங்காண் அம்மானாய். 17



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிளிவந்த மென்மொழியாள் கேழ்கிளரும் பாதியனை
வெளிவந்த மாலயனுங் காண்பரிய வித்தகனைத்
தெளிவந்த தேறலைச் சீரார் பெருந்துறையில்
எளிவந் திருந்திரங்கி எண்ணரிய இன்னருளால்
ஒளிவந்தென் உள்ளத்தின் உள்ளே ஒளிதிகழ
அளிவந்த அந்தணனைப் பாடுதுங்காண் அம்மானாய். 18

முன்னானை மூவர்க்கும் முற்றுமாய் முற்றுக்கும்
பின்னானைப் பிஞ்ஞகனைப் பேணு பெருந்துறையின்
மன்னானை வானவனை மாதியலும் பாதியனைத்
தென்னானைக் காவானைத் தென்பாண்டி நாட்டானை
என்னானை என்னப்பன் என்பார்கட் கின்னமுதை
அன்னானை அம்மானைப் பாடுதுங்காண் அம்மானாய். 19

பெற்றி பிறர்க்கரிய பெம்மான் பெருந்துறையான்
கொற்றக் குதிரையின்மேல் வந்தருளித் தன்னடியார்
குற்றங்கள் நீக்கிக் குணங்கொண்டு கோதாட்டிச்
சுற்றிய சுற்றத் தொடர்வறுப்பான் தொல்புகழே
பற்றியிப் பாசத்தைப் பற்றறநாம் பற்றுவான்
பற்றியபே ரானந்தம் பாடுதுங்காண் அம்மானாய். 20

## சுட்டறுத்தல்

வெள்ளந்தாழ் விரிசடையாய் விடையாய் விண்ணோர்
பெருமானே எனக்கேட்டு வேட்ட நெஞ்சாய்ப்
பள்ளந்தாழ் உறுபுனலிற் கீழ்மே லாகப்
பதைத்துருகும் அவர்நிற்க என்னை யாண்டாய்க்கு
குள்ளந்தாள் நின்றுச்சி யளவும் நெஞ்சாய்
உருகாதால் உடம்பெல்லாங் கண்ணாய் அண்ணா
வெள்ளந்தான் பாயாதால் நெஞ்சங் கல்லாம்
கண்ணிணையும் மரமாம் தீவினையி னேற்கே. 01



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வினையிலே கிடந்தேனைப் புகுந்து நின்று
போதுநான் வினைக்கேடன் என்பாய்போல
இனையனான் என்றுன்னை அறிவித் தென்னை
ஆட்கொண்டெம் பிரானானாய்க் கிரும்பின் பாவை
அனையநான் பாடேன்நின் றாடேன் அந்தோ
அலறிடனே உலறிடேன் ஆவி சோரேன்
முனைவனே முறையோநான் ஆன வாறு
முடிவறியேன் முதலந்தம் ஆயி னானே. 02

ஆயனான்மறையவனும் நீயே யாதல்
அறிந்துயான் யாவரினுங் கடைய னாய
நாயினேன் ஆதலையும் நோக்கிக் கண்டு
நாதனே நானுனக்கோர் அன்பன் என்பேன்
ஆயினேன் ஆதலால் ஆண்டு கொண்டாய்
அடியார்தாம் இல்லையே அன்றி மற்றோர்
பேயனேன் இதுதான்நின் பெருமை யன்றே
எம்பெருமான் என்சொல்லிப் பேசு கேனே 03

பேசிற்றாம் ஈசனே எந்தாய் எந்தை
பெருமானே என்றென்றே பேசிப் பேசிப்
பூசின்றாம் திருநீறே நிறையப் பூசிப்
போற்றியெம் பெருமானே என்று பின்றா
நேசத்தாற் பிறப்பிறப்பைக் கடந்தார் தம்மை
ஆண்டானே அவாவெள்ளக் கள்வ னேனை.
மாசற்ற மணிக் குன்றே எந்தாய் அந்தோ
என்னை நீ ஆட்கொண்ட வண்ணந் தானே 04

வண்ணந்தான் சேயதன்று வெளிதே யன்ற
நேகன்ஏகன் அணுவணுவில் இறந்தாய் என்றங்
கெண்ணந்தான் தடுமாறி இமையோர் கூட்டம்
எய்துமா றறியாத எந்தாய் உன்றன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வண்ணதா னதுகாட்டி வடிவு காட்டி
மலர்க்கழல்க ளவைகாட்டி வழியற் றேனைத்
திண்ணந்தான் பிறவாமற் காத்தாட் கொண்டாய்
எம்பெருமான் என்சொல்லிச் சிந்திக் கேனே 05

சிந்தனைநின் றனக்காக்கி நாயி னேன்றன்
கண்ணிணைநின் திருப்பாதப் போதுக் காக்கி
வந்தனையும் அம்மலர்க்கே யாக்கி வாக்குன்
மணிவார்த்தைக் காக்கி யைம் புலன்கள் ஆர
வந்தனைஆட் கொண்டுள்ளே புகுந்த விச்சை
மாலமுதப் பெருங்கடலே மலையே உன்னைத்
தந்தனைசெந் தாமரைக்கா டனைய மேனித்
தனிச்சுடரே இரண்டுமிலித் தனிய னேற்கே. 06

தனியனேன் பெரும்பிறவிப் பௌவத் தெவ்வத்
தடந்திரையால் எற்றுண்டு பற்றென் றின்றிக்
கனியை நேர் துவர்வாயார் என்னுங் காலாற்
கலக்குண்டு காமவான் சுறவின் வாய்ப்பட்
டினியென்னே உய்யுமா றென்றென் றெண்ணி
அஞ்செழுத்தின் புணைபிடித்துக் கிடக்கின் றேனை,
முனைவனே முதலந்தம், இல்லா மல்லற்
கரைகாட்டி ஆட்கொண்டாய் மூர்க்க னேற்கே, 07

கேட்டாரும் அறியாதான் கேடொன் றில்லான்
கிளையிலான் கேளாதே எல்லாங் கேட்டான்
நாட்டார்கள் விழித்திருப்ப ஞாலத் துள்ளே
நாயினுக்குத் தவி சிட்டு நாயி னேற்கே
காட்டா தனவெல்லாங் காட்டிப் பின்னுங்
கேளா தனவெல்லாங் கேட்பித் தென்னை
மீட்டேயும் பிறவாமற் காத்தாட் கொண்டான்
எம்பெருமான் செய்திட்ட விச்சை தானே! 08



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விச்சைதான் இதுவொப்ப துண்டோ கேட்கின்,
மிகுகாதல் அடியார்தம் அடிய னாக்கி
அச்சந் தீர்த் தாட்கொண்டான் அமுதம் ஊறி
அகம்நெகவே புகுந்தாண்டான் அன்பு கூர
அச்சன் ஆண் பெண்ணலி ஆகாச மாகி
ஆரழலாய் அந்தமாய் அப்பால் நின்ற
செச்சைமா மலர்புரையும் மேனி எங்கள்
சிவபெருமான் எம்பெருமான் தேவர் கோவே. 09

தேவர்கோ அறியாத தேவ தேவன்
செழும்பொழில்கள் பயந்துகாத் தழிக்கும் மற்றை
மூவர்கோ னாய்நின்ற முதல்வன் மூர்த்தி
மூதாதை மாதாளும் பாகத் தெந்தை
யாவர்கோன் என்னையும்வந் தாண்டு கொண்டான்
யாம் ஆர்க்கும் குடி அல்லோம். யாதும் அஞ்சோம்
மேவினோம் அவனடியார் அடியா ரோடும்
மேன்மேலுங் குடைந்தாடி யாடு வோமே. 10

**தொல்லை யிரும்பிறவிச் சூழும் தளைநீக்கி**
**அல்லலறுத் தானந்த மாக்கியதே - எல்லை**
**மருவா நெறியளிக்கும் வாதவூ ரெங்கோன்**
**திருவா சகமென்னும் தேன்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நவாலி

# அந்திரான் முருகப் பெருமான்

# திருவூஞ்சல்

*(நவாலியூர் க. சோமசுந்தரப்புலவர் பாடியது)*

## காப்பு

திருமருவு சிவபெருமான் நுதலிற் றோன்றிச்
சிவமருவு சரவணப்பூந் தடத்தில் வந்தே
உரமருவு சூர்முதலைக் கொன்று மேலாம்
உம்பர்களுக் குயர்வாழ்வு தந்த பெம்மான்
மருமருவு மலர்ச்சோலை அந்தி ரானில்
வரமருளு முருகனிசை யூஞ்சல் பாடக்
கரமருவு கரடதட விகட கும்பக்
கரிமுகவன் இருசரணங் காப்ப தாமே.

## நூல்

1. சோதிவிரி மரகதப்பொற் றூண்கள் நாட்டிச்
சுடருமிழும் வயிரமணி விட்டம் பூட்டித்
தீதகலும் வெண்டரள வடங்கள் பூட்டித்
தேசுமலி செம்பவளப் பலகை மாட்டி
ஆதரவா யியற்றுமணி யூஞ்சன் மீதே
அம்மைவள்ளி யானையுட னமர்ந்து மேவிக்
கோதகற்றும் அந்திரான் பதியில் வாழும்
குமரகுரு பரமுருகா ஆடீ ரூஞ்சல்

2. ஆதவனு மம்புலியுங் கவிகை தாங்க
அடன்மிகுந்த பவனனுயர் கவரி வாங்க
வேதனரி யிருபுடையு மாசி பேச
விண்ணவர்கள் கற்பகமென் மலர்கள் வீச
நாதமலி மாடகயாழ் முனிவன் மீட்ட
நடனவரம் பையர்களபி நயங்கள் காட்டக்
கோதகற்றும் அந்திரான் பதியில் வாழும்
குமரகுரு பரமுருகா ஆடீ ரூஞ்சல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. மங்கலதூ ரியமியம்பச் சங்க மோங்க
வானகதுந் துபிமுழங்க முனிவர் வாழ்த்த
எங்குமர கரமுருக வோசை யோங்க
இருக்குமறை யந்தணர்கள் வேதம் பாடத்
தங்குமருள் அடியர் குழாந் துதிகள் பாடத்
தமிழ்மறையும் வாசகமும் தக்கோ ரோதக்
கொங்கலர்தண் டலைசூழும் அந்தி ரானிற்
குமரகுரு பரமுருகா ஆடீ ரூஞ்சல்

4. மந்திரநீர் கங்கையினீர் பனிநீ ராட்டி
வன்னப்பூம் பட்டுடுத்து மாலை மாட்டிச்
சந்தமகில் நறுந்தூப மெங்கு மூட்டித்
தகுதிபெறு கர்ப்பூர தீபங் காட்டிப்
புந்திமகிழ் புத்தமுதும் பழமுங் கூட்டிப்
போற்றுபல வடியவர்கள் வடந்தொட் டாட்டக்
கொந்தலர்பூஞ் சோலைதிகழ் அந்தி ரானிற்
குமரகுரு பரமுருகா ஆடீ ரூஞ்சல்

5. பம்புசுடர் மாணிக்க மகுட மாடப்
பன்னிரண்டு கரமாட முகங்க ளாட
அம்புவியோர் சஞ்சிதந்தீர் விழிக ளாட
அழகுசுடர் வேலாட மயூர மாட
நம்புகுற மின்னாட யானை யாட
நாதமலி செஞ்சிலம்புங் கழலு மாடக்
கொம்பினிடைக் குயில்பாடும் அந்தி ரானிற்
குமரகுரு பரமுருகா ஆடீ ரூஞ்சல்.

6. திங்களொடு கங்கையணி செல்வ னோர்பால்
சித்திபுத்தி மருவுகரி முகவ னோர்பால்
துங்கமிகு முத்தலைவேற் குமர னோர்பால்
சுடருமிழ்வாள் வீரபத் திரனு மோர்பால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பங்கயமே லயனொருபால் நெடுமா லோர்பால்
பத்திமலிந் திடுவீர வாகு வோர்பால்
கொங்கலர்பூஞ் சோலைமலி அந்திரானிற்
குமரகுரு பரமுருகா ஆடீ ரூஞ்சல்

7. வாலைதிரி புரைபுவனை பாலா வென்றும்
மலமழிக்குங் கனகதண்டைக் காலா வென்றும்
நீலமயில் ஆறுமுக முருகா வென்றும்
நீடுதுள வணியுமரி மருகா வென்றும்
நாலுமறை பேசுமுயர் போதா வென்றும்
நல்லடியார் விழைவதருள் தாதா வென்றும்
கோலமிகு மடியார்தொழும் அந்தி ரானிற்
குமரகுரு பரமுருகா ஆடீ ரூஞ்சல்

8. சோதிவிரி யோராறு முகங்கள் போற்றி
தோள்களொடு பன்னிரண்டும் படையும் போற்றி
வாதுபுரி சூரறுத்த வடிவேல் போற்றி
மங்கைமா ரோரிருவர் மலர்த்தாள் போற்றி
நாதபரி புரகமல பாதம் போற்றி
நாறுகடம் பணிந்தமணி மார்பும் போற்றி
கோதுதவிர் அடியர்துதி அந்தி ரானிற்
குமரகுரு பரமுருகா ஆடீ ரூஞ்சல்

9. ஓங்குபலக் குன்றுடைத்தீ ராடீ ரூஞ்சல்
உள்ளமலர் குன்றுடைப்பீ ராடீ ரூஞ்சல்
தீங்குளமா மரமறுத்தீ ராடீ ரூஞ்சல்
தீயவினை மரமறுப்பீ ராடீ ரூஞ்சல்
வாங்குமலை கடல்குடித்தீ ராடீ ரூஞ்சல்
வஞ்சமலை கடல் குடிப்பீ ராடீ ரூஞ்சல்
கோங்குமலர் சோலையந்தி ரானில் வாழும்
குமரகுரு பரமுருகா ஆடீ ரூஞ்சல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10. ஆவாழி அந்தணரு மரசும் வாழி
ஐந்தெழுத்துங் கண்டிகையுங் நீறும் வாழி
பூவாழும் கங்கைமுடிப் புனிதன் வாழி
பொன்மலைவல் லியும்வாழி புத்தேள் வாழி
தேவாழும் யானையுடன் குறமின் வாழி
சேவல்மயில் வேல்வாழி அடியர் வாழி
கோவாழு மந்திரான் பதியும் வாழி
குமரகுரு பரமுருகன் வாழி வாழி.



# திருப்பாவை

அன்னவயற்புதுவை ஆண்டாள் அரங்கிற்குப்
பன்னு திருப்பாவைப் பல்பதிகம் - இன்னிசையால்
பாடிக் கொடுத்தாள்நற் பாமாலை பூமாலை
சூடிக் கொடுத்தாளைச் சொல்லு.

மார்கழித் திங்கள் மதிநிறைந்த நன்னாளால்
நீராடப் போதுவீர் போதுமினோ நேரிழையீர்
சீர்மல்கும் ஆய்ப்பாடிச் செல்வச் சிறுமீர்காள்
கூர்வேற் கொடுந்தொழிலன் நந்தகோ பன்குமரன்
ஏரார்ந்த கண்ணி யசோதை யிளஞ்சிங்கம்
கார்மேனிச் செங்கண் கதிர்மதியம் போல்முகத்தான்
நாரா யணனே நமக்கே பறை தருவான்
பாரோர் புகழ்ப் படிந்தேலோ ரெம்பாவாய். 01

வையத்து வாழ்வீர்கள்! நாமும்நம் பாவைக்கு
செய்யும் கிரிசைகள் கேளீரோ பாற்கடலுள்
பையத் துயின்ற பரமன் அடிபாடி
நெய்யுண்ணோம் பாலுண்ணோம் நாட்காலே நீராடி
மையிட் டெழுதோம் மலரிட்டு நாம்முடியோம்
செய்யா தனசெய்யோம் தீக்குறளை சென்றோதோம்
ஐயமும் பிச்சையும் ஆந்தனையும் கைகாட்டி
உய்யுமா றெண்ணி யுகந்தேலோ ரெம்பாவாய். 02



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓங்கி யுலகளந்த உத்தமன் பேர்பாடி
நாங்கள்நம் பாவைக்குச் சாற்றிநீ ராடினால்
தீங்கின்றி நாடெல்லாம் திங்கள்மும் மாரிபெய்து
ஓங்கு பெருஞ்செந்நெ லூடு கயலுகள
பூங்குவளைப் போதில் பொறிவண்டு கண்படுப்ப
தேங்காதே புக்கிருந்து சீர்த்த முலைபற்றி
வாங்க குடம்நிறைக்கும் வள்ளற் பெரும்பசுக்கள்
நீங்காத செல்வம் நிறைந்தேலோ ரெம்பாவாய். 03

ஆழி மழைக்கண்ணா! ஒன்றுநீ கைகரவேல்
ஆழியுள் புக்கு முகந்துகொ டார்த்தேறி
ஊழி முதல்வன் உருவம் போல் மெய்கறுத்து
பாழியந் தோளுடைப் பத்மநா பன்கையில்
ஆழிபோல் மின்னி வலம்புரிபோல் நின்றதிர்ந்து
தாழாதே சார்ங்கம் உதைத்த சரமழைபோல்
வாழவுல கினிற் பெய்திடாய் நாங்களும்
மார்கழிநீ ராட மகிழ்ந்தேலோ ரெம்பாவாய். 04

மாயனை மன்னு வடமதுரை மைந்தனை
தூய பெருநீர் யமுனைத் துறைவனை
ஆயர் குலத்தினில் தோன்றும் அணிவிளக்கை
தாயைக் குடல் விளக்கஞ் செய்ததா மோதரனை
தூயோமாய் வந்துநாம் தூமலர்தூ வித்தொழுது
வாயினாற் பாடி மனதினாற் சிந்திக்க
போய பிழையும் புகுதருவான் நிற்கனவும்
தீயினில் தூசாகும் செப்பேலோ ரெம்பாவாய். 05

புள்ளும் சிலம்பின்காண் புள்ளரையன் கோயிலில்
வெள்ளை விளிசங்கின் பேரரவம் கேட்டிலையோ?
பிள்ளாய்! எழுந்திராய் பேய்முலை நஞ்சுண்டு
கள்ளச் சகடம் கலக்கழியக் காலோச்சி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெள்ளத் தரவில் துயிலமர்ந்த வித்தினை
உள்ளத்துக் கொண்டு முனிவர்களும் யோகிகளும்
மெள்ள வெழுந்து அரியென்ற பேரரவம்
உள்ளம் புகுந்து குளிர்ந்தேலோ ரெம்பாவாய். 06

கீசுகீ சென்றெங்கும் ஆனைச்சாத் தன்கலந்து
பேசின பேச்சரவம் கேட்டிலையோ? பேய்ப்பெண்ணே?
காசும் பிறப்பும் கலகலப்பக் கைபேர்த்து
வாச நறுங்குழல் ஆய்ச்சியர் மத்தினால்
ஓசை படுத்த தயிரரவம் கேட்டிலையோ
நாயகப் பெண்பிள்ளாய்! நாரா யணன்மூர்த்தி
கேசவனைப் பாடவும்நீ கேட்டே கிடந்தியோ
தேசம் உடையாய்! திறவேலோ ரெம்பாவாய். 07

கீழ்வானம் வெள்ளென் றெருமை சிறுவீடு
மேய்வான் பரந்தனகாண்; மிக்குள்ள பிள்ளைகளும்
போவான்போ கின்றாரைப்; போகாமல் காத்து உன்னைக்
கூவுவான் வந்துநின்றோம் கோது கலமுடைய
பாவாய்! எழுந்திராய் பாடிப் பறை கொண்டு
மாவாய் பிளந்தானை மல்லாரை மாட்டிய
தேவாதி தேவனைச் சென்றுநாம் சேவித்தால்
ஆவாவென் றாராய்ந் தருளேலோ ரெம்பாவாய். 08

தூமணி மாடத்துச் சுற்றும் விளக்கெரிய
தூபம் கமழத் துயிலணைமேல் கண்வளரும்
மாமன் மகளே மணிக்கதவம் தாள்திறவாய்
மாமீர்! அவளை யெழுப்பீரோ? உன்மகள்தான்
ஊமையோ? அன்றிச் செவிடோ? அனந்தலோ?
ஏமப் பெருந்துயில் மந்திரப் பட்டாளோ
மாமாயன் மாதவன் வைகுந்தன் என்றென்று
நாமம் பலவும் நவின்றேலோ ரெம்பாவாய். 09



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோற்றுச் சுவர்க்கம் புகுகின்ற அம்மனாய்!
மாற்றமும் தாராரோ வாசல் திறவாதார்?
நாற்றத் துழாய்முடி நாராயணன் நம்மால்
போற்றப் பறைதரும் புண்ணியனால் பண்டொருநாள்
கூற்றத்தின் வாய்வீழ்ந்த கும்ப கர்ணனும்
தோற்றம் உனக்கே பெருந்துயிர்தான் தந்தோனோ
ஆற்ற அனந்தல் உடையாய் அருங்கலமே
தேற்றமாய் வந்து திறவேலோ ரெம்பாவாய். 10

கற்றக் கறவைக்கணங்கள் பலகறந்து
செற்றார் திறவழியச் சென்று செருச்செய்யும்
குற்றமொன் றில்லாத கோவலர்தம் பொற்கொடியே!
புற்றர வல்குற் புனமயிலே! போதராய்
சுற்றத்துத் தோழிமா ரெல்லாரும் வந்துநின்
முற்றம் புகுந்து முகில்வண்ணன் பேர்பாட
சிற்றாதே பேசாதே செல்வப்பெண் டாட்டிநீ
எற்றக் குறங்கும் பொருளேலோ ரெம்பாவாய். 11

கனைத்திளங் கற்றெருமை கன்றுக் கிரங்கி
நினைத்து முலைவழியே நின்றுபால் சோர
நனைத்தில்லம் சேறாக்கும் நற்செல்வம் தங்காய்!
பனித்தலை வீழநின் வாசற் கடைபற்றி
சினத்தினால் தென்னிலங்கைக் கோமானைச் செற்ற
மனத்துக் கினியானைப் பாடவும்நீ வாய்திறவாய்
இனித்தான் எழுந்திராய் ஈதென்ன பேருறக்கம்
அனைத்தில்லத் தாரும் அறந்தேலோ ரெம்பாவாய். 12

புள்ளின்வாய் கீண்டானைப் பொல்லா வரக்கனை
கிள்ளிக் களைந்தானைக் கீர்த்திமை பாடிப்போய்
பிள்ளைகள் எல்லோரும் பாவைக் களம்புக்கார்
வெள்ளி யெழுந்துவியாழ முறங்கிற்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புள்ளும் சிலம்பினகாண் போதரிக் கண்ணினாய்
குள்ளக் குளிரக் கடைந்துநீ ராடாதே
பள்ளிக் கிடத்தியே? பாவாய்? நீ நன்னாளால்
கள்ளம் தவிர்ந்து கலைந்தேலோ ரெம்பாவாய். 13

உங்கள் புழைக்கடைத் தோட்டத்து வாவியுள்
செங்கழுநீர் வாய்நெகிழ்ந் தாம்பல்வாய் கூப்பினகாண்
செங்கற் பொடிக்கூறை வெண்பல் தவத்தவர்
தங்கள் திருக்கோயில் சங்கிடுவான் போதந்தார்
எங்களை முன்னம் எழுப்புவான் வாய்பேசும்
நங்காய்! எழுந்திராய்! நாணாதாய்! நாவுடையாய்!
சங்கொடு சக்கரம் ஏந்தும் தடக்கையன்
பங்கயக் கண்ணானைப் பாடேலோ ரம்பாவாய். 14

எல்லே! இளங்கிளியே இன்னம் உறங்குதியோ!
சில்லென் றழையேன்மின்! நங்கையீர்! போதர்கின்றேன்
வல்லையுன் கட்டுரைகள் பண்டேயுன் வாயறிதும்
வல்லீர்கள் நீங்களே நானேதா னாயிடுக
ஒல்லைநீ போதாய் உனக்கென்ன வேறுடைய
எல்லாரும் போந்தாரோ! போந்தார்போந் தெண்ணிக்கொள்
வல்லானை கொன்றானை மாற்றாரை மாற்றழிக்க
வல்லானை மாயனைப் பாடேலோ ரெம்பாவாய் 15

நாயக னாய்நின்ற நந்தகோ பனுடைய
கோயில்காப்பானே! கொடித்தோன்றும் தோரண
வாயில்காப்பானே மணிக்கதவம் தாள்திறவாய்
ஆயர் சிறுமிய ரோமுக்கு அறைபறை
மாயன் மணிவண்ணன் நென்னலே வாய்நேர்ந்தான்
தூயேய்மாவந்தோம் துயிலெழப் பாடுவான்
வாயால் முன்னம்முன்னம் மாற்றாதே யம்மாநீ
நேய நிலைக்கதவம் நீக்கேலோ ரெம்பாவாய். 16



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்பரமே தண்ணீரே சோறோ யறஞ்செய்யும்
எம்பெருமான்! நந்தகோ பாலா! எழுந்திராய்
கொம்பனார்க் கெல்லாம் கொழுந்தே! குலவிளக்கே!
எம்பெரு மாட்டி யசோதாய்! அறிவுறாய்
அம்பரம் ஊடறுத் தோங்கி யுலகளந்த
உம்பர்கோ மானே உறங்கா தெழுந்திராய்
செம்பொற் கழலடிச் செல்வா! பலதேவா!
உம்பியும் நீயு முறங்கேல் ஓர் எம்பாவாய். 17

உந்து மதளிற்றான் ஓடாத தோள்வலியான்
நந்தகோ பாலன் மருமகனே! நப்பின்னாய்!
கந்தம் கமழும் குழலீ! கடைதிறவாய்
வந்தெங்கும் கோழியழைத்தனகாண் மாதவிப்
பந்தல்மேல் பல்கால் குயிலினங்கள் கூவினகாண்
பந்தர் விரலி உண்மைத்துனன் பேர்பாட
செந்தா மரைக்கையால் சீரார் வளையொலிப்ப
வந்து திறவாய் மகிழ்ந்தேலோ ரெம்பாவாய் 18

குத்து விளக்கெரியக் கோட்டுகாற் கட்டில்மேல்
மெத்தென்ற பஞ்ச சயனத்தின் மேலேறி
கொத்தலர் பூங்குழல் நப்பின்னை கொங்கைமேல்
வைத்துக் கிடந்த மலர்மார்பா! வாய்திறவாய்
மைத்தடங் கண்ணினாய்! நீயுன் மணாளனை
எத்தனை போதும் துயிலெழ வொட்டாய்காண்
எத்தனை யேலும் பிரிவாற்ற கில்லாயால்
தத்துவம் அன்று தகவேலோ ரெம்பாவாய். 19

முப்பத்து மூவர் அமரர்க்கு முன்சென்று
கப்பம் தவிர்க்கும் கலியே! துயிலெழாய்
செப்ப முடையாய் திறலுடையாய்! செற்றார்க்கு
வெப்பங் கொடுக்கும் விமலா! துயிலெழாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செப்பன்ன மென்முலைச் செவ்வாய்ச் சிறுமருங்குல்
நப்பின்னை நங்காய்! திருவே! துயிலெழாய்
உக்கமும் தடடொளியும் தந்துன் மணாளனை
இப்போதே யெம்மைநீ ராட்டேலோ ரெம்பாவாய் 20

ஏற்ற கலங்கள் எதிர்பொங்கி மீதளிப்ப
மாற்றாதே பால்சொரியும் வள்ளற்பெரும் பசுக்கள்
ஆற்றப் படைத்தான் மகனே! அறிவுறாய்
ஊற்ற முடையாய்! பெரியாய் உலகினில்
தோற்றமாய் நின்ற சுடேரே! துயிலெழாய்
மாற்றா னருக்கு வலிதொலைந்துன் வாசற்கண்
ஆற்றாது வந்துன் அடிபணியு மாபோலே
போற்றியாம் வந்தோம் புகழ்ந்தேலோ ரெம்பாவாய். 21

அங்கண்மா ஞாலத் தரசர் அபிமான
பங்கமாய் வந்துநின் பள்ளிக்கட் டிற்கீழே
சங்க மருப்பார்போல் வந்து தலைப்பெய்தோம்
கிங்கிணி வாய்செய்த தாமரைப் பூப்போலே
செங்கண் சிறுச்சிறுதே யெம்மேல் விழியாவோ
திங்களு மாதித் தியனும் எழுந்தாற்போல்
அங்கண் இரண்டுங்கொண் டெங்கள்மேல் நோக்குதியேல்
எங்கள்மேற் சாபம் இழிந்தேலோ ரெம்பாவாய். 22

மாரி மலைமுழைஞ்சில் மன்னிக் கிடந்துறங்கும்
சீரிய சிங்கம் அறிவுற்றுத் தீவிழித்து
வேரி மயிர்பொங்க எப்பாடும் போர்ந்துதறி
மூரி நிமிர்ந்து முழங்கிப் புறப்பட்டு
போ தருமா போலேநீ பூவைப்பூ வண்ணா உன்
கோயில் நின் றிங்ஙனே போந்துருளி கோப்புடைய
சீரிய சிங்கா சனத்திலிருந்து யாம்வந்த
காரியம் ஆராய்ந் தருளேலோ ரெம்பாவாய் 23



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்றிவ் உலக மளந்தாய் அடி போற்றி
சென்றங்குத் தென்னிலங்கை சென்றாய்! திறல்போற்றி
பொன்றச் சகடம் உதைத்தாய் புகழ்போற்றி
கன்று குணிலா எறிந்தாய்! கழல்போற்றி
குன்று குடையாய் எடுத்தாய்! குணம் போற்றி
வென்று பகைகெடுக்கும் நின்கையில் வேல் போற்றி
என்றென்றுன் சேவகமே யேத்திப் பறைகொள்வான்
இன்றுயாம் வந்தோம் இரங்கேலோ ரெம்பாவாய். 24

ஒருத்தி மகனாய்பிறந்து ஓரிரவில்
ஒருத்தி மகனாய் ஒளித்து வளர
தரிக்கிலா னாகித்தான் தீங்கு நினைந்த
கருத்தைப் பிழைப்பித்துக் கஞ்சன் வயிற்றில்
நெருப்பென்ன நின்ற நெடுமாலே உன்னை
அருத்தித்து வந்தோம் பறைதருதி யாகில்
திருத்தக்க செல்வமும் சேவகமும் யாம்பாடி
வருத்தமும் தீர்ந்து மகிழ்ந்தேலோ ரெம்பாவாய் 25

மாலே மணிவண்ணா! மார்கழிநீ ராடுவான்
மேலையார் செய்வனகள் வேண்டுவென கோடியேல்
ஞாலத்தை யெல்லாம் நடுங்க முரல்வன
பாலன்ன வண்ணத்துன் பாஞ்ச சன்னியமே
போல்வன சங்கங்கள் போய்ப்பா டுடையனவே
சாலப் பெரும்பறையே பல்லாண் டிசைப்பாரே
கோல விளக்கே கொடியே! விதானமே
அலின் இலையாய் அருளாலோ ரெம்பாவாய். 26

கூடாரை வெல்லும்சீர்க் கோவிந்தா உன்றன்னைப்
பாடிப் பறைகொண்டு யாம்பெறு சன்மானம்
நாடு புகழும் பரிசினால் நன்றாக
சூடகமே தோள்வளையே தோடே செவிப்பூவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடகமே யென்றனைய தோடே செவிப்பூவே
ஆடை யுடுப்போம் அதன்பின்னே பாற்சோறு
மூடநெய் பெய்து முழங்கை வழிவர
கூடியிருந்து குளிர்ந்தேலோ ரெம்பாவாய். 27

கறவைகள் பின்சென்று கானகஞ்சேர்ந் துண்போம்
அறிவொன்று மில்லாத ஆயக்குலத்து உன்றன்னைப்
பிறவி பெறுந்தனை புண்ணியம் யாமுடையோம்
குறைவொன்று மில்லாத கோவிந்தா! உன்றன் னோடு
உறவெல் நமக்கிங் கொழிக்க வொழியாது
அறியாத பிள்ளைகளோம் அன்பினால் உன்றன்னைச்
சிறுபே ரழைத்தனவும் சீறி யருளாதே
இறைவா! நீ தாராய் பறையேலோ ரெம்பாவாய் 28

சிற்றஞ் சிறுகாலே வந்தன்னைச் சேவித்து
பொற்றா மரையடியே போற்றும் பொருள்கேளாய்
பெற்றம் மேய்த் துண்ணும் குலத்திற் பிறந்த நீ
குற்றறே வலெங்களைக் கொள்ளாமற் போகாது
இற்றைப் பறைகொள்வா னன்று காண் கோவிந்தா
எற்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும் உன்றன் னோடு
உற்றோமே யாவோம் உனக்கேநா மாட்செய்வோம்
மற்றைநங் காமங்கள் மாற்றேலோ ரெம்பாவாய். 29

வங்கக் கடல் கடைந்த மாதவனைக் கேசவனை
திங்கள் திருமுகத்துச் சேயிழையார் சென்றிறைஞ்சி
அங்கப் பறைகொண்ட வாற்றை அணிபுதுவைப்
பைங்க மலத் தண்தெரியல் பட்டர் பிரான் கோதை சொன்ன
சங்கத் தமிழ் மாலை முப்பதும் தப்பாமே
இங்கிப் பரிசுரைப்பார் ஈயிரண்டு மால் வரைத்தோள்
செங்கண் திருமுகத்துச் செல்வத் திருமாலால்
எங்கும் திருவருள் பெற் றின்புறுவ ரெம்பாவாய். 30

- ஸ்ரீ ஆண்டாள் திருவடிக்கே சரணம் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நடராஜப் பத்து



மண்ணாதி பூதமொடுவிண்ணாதி அண்டம் நீ
மறை நான்கில் அடிமுடியும் நீ
மதியும் நீ ரவியும் நீ புனலும் நீ அனலும் நீ
மண்டல மிரளடேழும் நீ

பெண்ணும் நீ ஆனும் நீ பல்லுயிர்க்குயிரும் நீ
பிறவும் நீ ஒருவன் நீயே
பேதாதி பேதம் நீ பாதாதி கேசம் நீ
பெற்ற தாய் தந்தை நீயே

பொன்னும் நீ பொருளும் நீ இருளும் நீ ஒளியும் நீ
போதிக்கவந்த குரு நீ
புகழொணாக் கிரகங்க ளொன்பதும் நீ யிந்தப்
புவனங்கள் பெற்றவனும் நீ

எண்ணரிய ஜீவகோ டிகளீன்ற அப்பனே
என் குறைக ளார்க் குரைப்பேன்
ஈசனே சிவகாமி நேசனே யெனையீன்ற
தில்லைவாழ் நடராஜனே 01

மானாட மழுவாட மதியாடப் புனலாட
மங்கை சிவகாமியாட
மாலாட நூலாட மறையாடத் திரையாட
மறைதந்த பிரம்மனாட

கோனாட வானுலகு கூட்டமெல்லாமாட
குஞ்சர முகத்தனாடக்
குண்டல மிரண்டாடத் தண்டைபுலி யுடையாடக்
குழந்தை முருகேசனாட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞானசம் பந்தரொடு பிந்திரர்பதி னொட்டு
முனியாட பாலகருமாட
நரைதும்பை யறுகாட நந்தி வாகனமாட
நாட்டியப் பெண்களோட

வினையோட உனைப்பாட யெனைநாடி யிதுவேளை
விருதோடு ஆடிவருவாய்
ஈசனே சிவகாமி நேசனே யெனையீன்ற
தில்லைவாழ் நடராஜனே 02

கடலென்ற புவிமீதில் அலையென்ற வுருக்கொண்டு
கனவென்ற வாழ்வை நம்பி
காற்றென்ற மூவாசை மாருதச் சுழலிலே
கண்டுண்டு நித்த நித்தம்

உடலென்ற கும்பிக்கு உணவென்ற யிரைதேடி
ஓயாம லிரவு பகலும்
உண்டுண் டுறங்குவதைக் கண்டதே யல்லாது
ஒருபய னடைந்தி லேனே

தடமென்ற மிடிகரையில் பந்தபா சங்களெனும்
தாபரம் பின்னலிட்டுத்
தாயென்று சேயென்று நீயென்று நானென்று
தமியேனை யிவ் வண்ணமாய்

இடையென்று கடைநின்று யேனென்று கேளா
திருப்பதுடன் னழகாகுமோ
ஈசனே சிவகாமி நேசனே யெனையீன்ற
தில்லைவாழ் நடராஜனே 03



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பம்புசூ னியமல்ல வைப்பல்ல மாரணந்
தம்பனம் வசியமல்ல
பாதாள வஞ்சனம் பரகாய் ப்ரவேச
மதுவல்ல சாலமல்ல

அம்புகுண் டுகள் விலக மொழியுமந் திரமல்ல
ஆகாய குளிகையல்ல
அன்போடு செய்கின்ற வாதமோடி களல்ல
அரிய மோ கனமுமல்ல

கும்பமுனி மச்சமுனி சட்டமுனி பிரம்மரிஷி
கொங்கணர் புலிப்பாணியும்
கோரக்கர் வள்ளுவர் போகமுனி யிவரெலாங்
கூறிடும் வைத்யமல்ல

என்மனதுன் னடிவிட்டு நீங்காது நிலைநிற்க
யேதுளவு புகல வருவாய்
ஈசனே சிவகாமி நேசனே யெனையீன்ற
தில்லைவாழ் நடராஜனே 04

நொந்துவந் தேனென்று ஆயிரஞ் சொல்லியும்
செவியென்ன மந்தமுண்டோ
நுட்பநெறி யறியாத பிள்ளையைப் பெற்றபின்
நோக்காத தந்தையுண்டோ

சந்தமுந் தஞ்சமென் றடியைப் பிடித்தபின்
தளராத செஞ்சமுண்டோ.
தந்திமுகன் அறுமுகன் இருபிள்ளை யில்லையோ
தந்தை நீ மலடுதானோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விந்தையும் ஜாலமும் உன்னிட மிருக்குதே
வினையொன்று மறிகிலேனே
வேதமும் சாஸ்த்ரமும் உன்னையே புகழுதே
வேடிக்கை யிது வல்லவோ

இந்தவுல கீரேழு மேனளித்தாய் சொல்லு
யினியுன்னை விடுவதில்லை
ஈசனே சிவகாமி நேசனே யெனையீன்ற
தில்லைவாழ் நடராஜனே 05

வழிகண்டு உன்னடியைத் துதியாத போதிலும்
வாஞ்சையில் லாத போதிலும்
வாலாய மாய்க்கோயில் சுற்றாத போதிலும்
வஞ்சமே செய்த போதும்

மொழியெதுகை மோனை யிலாமலே பாடினும்
மூர்க்கனே முகடாகினும்
மோசமே செய்யினும் தேசமே கவரினும்
முழு காமி யேயாகினும்

பழியெனக் கல்லவே தாய் தந்தைக் கல்லவோ
பார்த்தவர்கள் ஏசார்களோ
பாரறிய மனைவிக்குப் பாதியுட லீந்தநீ
பாலகனைக் காக்கொணாதோ?

எழில் பெரிய அண்டங்க ளடுக்கா யமைத்த நீ
யென் குறைகள் தீர்த்தால் பெரிதோ
ஈசனே சிவகாமி நேசனே யெனையீன்ற
தில்லைவாழ் நடராஜனே 06



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னைதந் தைகளெனை யீன்றதற் கழுவனோ
அறிவிலோ ததற் கழுவனோ
அல்லாமல் நான்முகம் தன்னையே நோவனோ
ஆசைமூன் றுக்கழுவனோ

முன்பிறப் பென்னவினை செய்தனென் றழுவனோ
மூடவறிவுக் கழுவனோ
முன்னிலென் வினைவந்து மூளுமென் றழுவனோ
மந்திவருமென் றுணர்வனோ

தன்னை நொந் தழுவனோ உன்னை நொந் தழுவனோ
தவமென்ன வென்றழுவனோ
தையலர்க் கழுவனோ மெய்வளர்க் கழுவனோ
தரித்திர திசைக் கழுவனோ

இன்னமென் னப்பிறவி வருமோ வென்றழுவனோ
யெல்லா முரைக்க வருவாய்
ஈசனே சிவகாமி நேசனே யெனையீன்ற
தில்லைவாழ் நடராஜனே 07

காயா முன் மரமீது பூ பிஞ் சறுத்தனோ
கன்னியர்கள் பழி கொண்டனோ
கடனென்று பொருள்பறித் தேவயி றெரித்தனோ
கிளை வழியில் முள்ளிட்டனோ

தாயா ருடன் பிறவிக் கென்னவினை செய்தனோ
தந்த பொரு ளிலை யென்றனோ
தானென்று கெர்வித்துக் கொலைகளவு செய்தனோ
தவசிகளை யேசினேனோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாயாரப் பொய்சொல்லி வீண்பொருள் பறித்தனோ
வானவரைப் பழித்திட்டேனோ
வடவைப்போல் பிறரைச் சேர்க்கா தடித்தனோ
வந்தபின் என் செய்தனோ

ஈயாத லோபி யென் றேபெய ரெடுத்தனோ
யெல்லாம் பொறுத் தருளுவாய்
ஈசனே சிவகாமி நேசனே யெனையீன்ற
தில்லைவாழ் நடராஜனே 08

தாயாரிருந்தென்ன தந்தையு மிருந்தென்ன
தன்பிறவி யுறவுகோடி
தனமலை குவித்தென்ன கனபெய ரெடுத்தென்ன
தரணியை யாண்டுமென்ன

சேயர்க ளிருந்தென்ன குருவா யிருந்தென்ன
சீடர் களிடமிருந்து மென்ன
சித்துபல கற்றென்ன நித்தமும் விரதங்கள்
செய்தென்ன நதிக ளெல்லாம்

ஓயாது மூழ்கினும் என்ன பலன் எமனோலை
ஒன்றைக் கண்டு தடுக்க
உதவுமோ யிதுவெல்லாம் சந்தையுற வென்றுதான்
உன்னிரு பதம் பிடித்தேன்

யார் மீது உன்மன மிருந்தாலும் முன்கடைக்
கண்பார்வை யது போதுமே
ஈசனே சிவகாமி நேசனே யெனையீன்ற
தில்லைவாழ் நடராஜனே 09



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னமுஞ் சொல்லவோ உன் மனங் கல்லோ
இரும்போ பெரும் பாறையோ
இருசெவியு மந்தமோ கேளாது அந்தமோ
இதுவுனக் கழகுதானோ

உன்னை விட்டெங்கு சென்றாலும் விழ வாவனோ
உனை யடுத்துங் கெடுவனோ
ஓகோவிது உன்குற்ற மென்குற்ற மொன்று மிலை
யுற்றுப்பார் பெற்றவையா

என் குற்றமாயினும் உன் குற்றமாயினும்
இனியரு ளளிக்க வருவாய்
ஈசனே சிவகாமி நேசனே யெனையீன்ற
தில்லைவாழ் நடராஜனே 10

சனிராகு கேதுபுதன் சுக்கிரன் செவ்வாய் குரு
சந்திரன் சூரிய னிவரை
சற்றெனக் குள்ளாக்கி ராசி பன்னிரண்டையும்
சமமாய் நிறுத்தி யுடனே

பனியொத்த நட்சத் திரங்களிரு பத்தேழும்
பக்குவப் படுத்திப் பின்னால்
பகர்கின்ற கரணங்கள் பதினொன்றையும் வெட்டிப்
பலரையும் அதட்டி யென்முன்

கனிபோலவே பேசி கெடுநினைவு நினைக்கின்ற
கசடர்களையும் கசக்கி
கர்த்தனின் தொண்டராம் தொண்டர்க்குத் தொண்டரின்
தொண்டர்கள் தொழும்ப ளாக்கி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனியவள மருவு சிறு மணவைமுனி சாமியெனை
யாள்வதினி யுன்கடன் காண்
ஈசனே சிவகாமி நேசனே யெனையீன்ற
தில்லைவாழ் நடராஜனே 11



# அபிராமி அம்மைப் பதிகம்

## காப்பு

தூய தமிழ்ப் பாமாலை சூட்டுவதற்கு மும்மதம் நால்வாய்
ஐங் கரன்தாள் வழுத்துவோம் - நேயர்நிதம்
எண்ணும் புகழ்க்கடவூர் எங்கள்அபி ராமவல்லி
நண்ணும்பொற் பதத்தில் நன்கு.

## நூல்

கலையாத கல்வியும் குறையாத வயதும்
ஓர் கபடு வாராத நட்பும், கன்றாத வளமையும்,
குன்றாத இளமையும், கழுபிணி இலாத உடலும்,
சலியாத மனமும், அன்பு அகலாத மனைவியும்,
தவறாத சந்தானமும், தாழாத கீர்த்தியும்,
மாறாத வார்த்தையும், தடைகள் வாராத கொடையும்,
தொலையாத நிதியமும், கோணாத கோலும்,
ஒரு துன்பம் இல்லாத வாழ்வும்,
துய்ய நின்பாதத்தில் அன்பும் உதவிப்
பெரிய தொண்டரொடு கூட்டு கண்டாய்;
அலைஆழி அறி துயில்கொள் மாயனது தங்கையே!
ஆதிகடவூரின் வாழ்வே!
அமுதீசர் ஒருபாகம் அகலாத சுகபாணி!
அருள் வாமி அபிராமியே! 01



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கார் அளக பந்தியும், பந்தியின் அலங்கலும்,
கரிய புருவச் சிலைகளும்,
காண குண்டலமும், மதி முக மண்டலமும்,
நுதல் கத்தூரிப் பொட்டும் இட்டுக்
கூர் அணிந்திடு விழியும், அமுத மொழியும்
சிறிய கொவ்வையின் கனி அதரமும்,
குமிழ் அனைய நாசியும், குந்த நிகர்
தந்தமும் கோடு சோடான களமும்,
வார் அணிந்து இறுமாந்த வனமுலையும்,
மேகலையும், மணி நூபுரப் பாதமும்,
வந்து எனது முன் நின்று, மந்தகாசமுமாக
வல் வினையை மாற்றுவாயே;
ஆர மணி வானில் உறை தாரகைகள் போல
நிறை ஆதி கடவூரின் வாழ்வே!
அமுதீசர் ஒருபாகம் அகலாத சுகபாணி!
அருள் வாமி! அபிராமியே! 02

மகர வார் குழல் மேல் அடர்ந்து, குமிழ் மீதினில் மறைந்து,
வாளைத் துறந்து, மைக் கயலை வென்ற நின் செங்கமல
விழி அருள் வரம் பெற்ற பேர்கள் அன்றோ
செகம் முழுதும் ஒற்றைத் தனிக் குடை கவித்து,
மேல் சிங்க ஆதனத்தில் உற்றுச், செங்கோலும்,
மனு நீதி முறைமையும் பெற்று, மிகு திகிரி உலகு ஆண்டு பின்பு
புகர் முகத்து ஐராவதப் பாகர் ஆகி, நிறை புத்தேளிர்
வந்து போற்றிப் போக தேவேந்திரன் எனப் புகழ
விண்ணில் புலோமசையொடும் சுகிப்பர்
அகரமுதலாகி வளர் ஆனந்த ரூபியே!
ஆதிகடவூரின் வாழ்வே
அமுதீசர் ஒருபாகம் அகலாத சுகபாணி!
அருள் வாமி! அபிராமியே. 03



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறி கடல்கள் ஏழையும், திகிரி இரு நான்கையும்,
மாதிரக் கரி எட்டையும், மா நாகம் ஆனதையும்,
மா மேரு என்பதையும், மா கூர்மம் ஆனதையும், ஓர்
பொறி அரவு தங்கிவரு புவனம் ஈ.ர் ஏழையும்,
புத்தேளிர் கூட்டத்தையும், பூமகளையும், திகிரி மாயவனையும்,
அரையில் புலி ஆடை உடையானையும்,
முறை முறைகளாய் ஈன்ற முதியவர்களாய்ப்
பழைமை முறைமை தெரியாத நின்னை,
மூவுலகில் உள்ளவர்கள் வாலை என்று அறியாமல்
மொழிகின்றது ஏது சொல்வாய்?
அறிவு நிறை விழுமியர் தம் ஆனந்த வாரியே!
ஆதி கடவூரின் வாழ்வே!
அமுதீசர் ஒரு பாகம் அகலாத சுகபாணி!
அருள் வாமி! அபிராமியே! 04

வாடாமல் உயிர் எனும் பயிர் தழைத்து ஓங்கி வர,
அருள் மழை பொழிந்தும்,
இன்ப வாரிதியிலே நின்னது அன்பு எனும்
சிறகினால் வருந்தாமலே அணைத்துக்,
கோடாமல் வளர் சிற்றெறும்பு முதல் குஞ்சரக்
கூட்டம் முதலான சீவ கோடிகள் தமக்குப் புசிக்கும்
புசிப்பினைக் குறையாமலே கொடுத்தும்,
நீடாழி உலகங்கள் யாவையும் நேயமாய் நின்
உதர பந்தி பூக்கும் நின்மலீ அகிலங்களுக்கு அன்னை
என்று ஓதும் நீலி என்று ஓதுவாரோ?
ஆடாய நான்மறையின் வேள்வியால் ஓங்கு புகழ்
ஆதிகடவூரின் வாழ்வே!
அமுதீசர் ஒரு பாகம் அகலாத சுகபாணி!
அருள் வாமி! அபிராமியே! 05



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல் குஞ்சரம் தொட்டு எறும்பு கடையானது ஒரு
பல் உயிர்க்கும் கல் இடைப் பட்டதேரைக்கும்,
அன்று உற்பவித்திடு கருப் பையுறு சீவனுக்கும்,
மல்கும் சராசரப் பொருளுக்கும், இமையாத வானவர்
குழாத்தினுக்கும், மற்றும் ஒரு மூவர்க்கும், யாவர்க்கும்,
அவரவர் மனச் சலிப்பு இல்லாமலே
நல்கும் தொழில் பெருமை உண்டாய் இருந்தும்,
மிகு நவ நிதி உனக்கு இருந்தும்,
நான் ஒருவன் வறுமையில் சிறியன் ஆனால்,
அந் நகைப்பு உனக்கே அல்லவோ?
அல் கலந்து, உம்பர் நாடு அளவு எடுக்கும் சோலை,
ஆதி கடவூரின் வாழ்வே!
அமுதீசர் ஒரு பாகம் அகலாத சுகபாணி!
அருள் வாமி! அபிராமியே! 07

நீடு உலகங்களுக்கு ஆதாரவாய் நின்று, நித்தமாய்,
முத்தி வடிவாய், நியமமுடன் முப்பத்து இரண்டு
அறம் வளர்க்கின்ற நீ மனைவியாய் இருந்தும்,
வீடு வீடுகள் தோறும் ஓடிப் புகுந்து, கால் வேசற்று,
இலச்சையும் போய், வெண் துகில் அரைக்கு அணிய
விதியற்று, நிர்வாண வேடமும் கொண்டு, கைக்கு ஓர்
ஓடு ஏந்தி, நாடு எங்கும் உள்ளம் தளர்ந்து நின்று,
உன்மத்தன் ஆகி அம்மா! உன் கணவன் எங்கெங்கும் ஐயம்,
புகுந்து ஏங்கி, உழல்கின்றது ஏது சொல்வாய்?
ஆடு கொடி மாடமிசை மாதர் விளையாடி வரும்
ஆதி கடவூரின் வாழ்வே!
அமுதீசர் ஒரு பாகம் அகலாத சுகபாணி
அருள் வாமி! அபிராமியே! 08



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞானம் தழைத்து, உன் சொரூபத்தை அறிகின்ற
நல்லோர் இடத்தினில் போய், நடுவினில் இருந்து, உவந்து,
அடிமையும் பூண்டு, அவர் நவிற்றும் உபதேசம் உட்கொண்டு
ஈனந்தனைத் தள்ளி எனது, நான் எனும் மானம்
இல்லாமலே துரத்தி, இந்திரிய வாயில்களை இறுகப் புதைத்து,
நெஞ்சு இருள் அற விளக்கு ஏற்றியே
வான் அந்தம் ஆன விழி அன்னமே! உன்னை என்
அகத் தாமரைப் போதிலே வைத்து, வேறே கவலை அற்று,
மேல் உற்ற பர வசம் ஆகி, அழியாதது ஓர்
ஆனந்த வாரிதியில் ஆழ்கின்றது என்று காண்?
ஆதி கடவூரின் வாழ்வே!
அமுதீசர் ஒரு பாகம் அகலாத சுகபாணி!
அருள் வாமி! அபிராமியே! 08

சலதி உலகத்தில் சராசரங்களை ஈன்ற தாய் ஆகில்,
எனக்குத் தாய் அல்லவோ? யான் உன் மைந்தன் அன்றோ?
என் சஞ்சலம் தீர்த்து, நின்றன்
முலை சுரந்து ஒழுகு பாலூட்டி என் முகத்தை உன்
முந்தானையால் துடைத்து, மொழிகின்ற மழலைக்கு
உகந்து கொண்டு, இன நிலா முறுவல் இன்புற்று, அருகில் யான்
குலவி விளையாடல் கொண்டு, அருள் மழை பொழிந்து,
அங்கை கொட்டி, வா வென்று அழைத்துக்
குஞ்சர முகன், கந்தனுக்கு இளையன் என்று எனைக்
கூறினால் ஈனம் உண்டோ?
அலை கடலிலே தோன்றும் ஆராத அமுதமே!
ஆதி கடவூரின் வாழ்வே!
அமுதீசர் ஒரு பாகம் அகலாத சுகபாணி!
அருள் வாமி! அபிராமியே! 09



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைப் போது கொண்டு, உன் பதப் போது தன்னில் கணப்
போதும் அர்ச்சிக்கிலேன்; கண் போதினால் உன் முகப் போது
தன்னை, யான் கண்டு தரிசினை புரிகிலேன்;
முப் பாதில் ஒரு போதும், என் மனப் போதிலே முன்னி,
உன் ஆலயத்தின் முன் போதுவார் தமது பின் போத நினைகிலேன்!
மோசமே போய் உழன்றேன்;
மைப் போதகத்திற்கு நிகரெனப் போது எரு
மைக் கடா மீது ஏறியே, மா கோர காலன் வரும்போது,
தமியேன் மனத் கலங்கித் தியங்கும்
அப் போது, வந்து உன் அருட்போது தந்து அருள்;
ஆதிகடவூரின் வாழ்வே!
அமுதீசர் ஒரு பாகம் அகலாத சுகபாணி!
அருள் வாமி! அபிராமியே! 10

மிகையும் துரத்த, வெம் பிணியும் துரத்த, வெகுளி
ஆனதும் துரத்த, மிடியும் துரத்த, நரை திரையும் துரத்த,
மிகு வேதனைகளும் துரத்தப்,
பகையும் துரத்த, வஞ்சனையும் துரத்தப், பசி என்பதும்
துரத்த, பாவம் துரத்த, பதி மோகம் துரத்தப்,
பல காரியமும் துரத்த,
நகையும் துரத்த, ஊழ் வினையும் துரத்த, என் நாளும் துரத்த,
வெகுவாய் நா வறண்டு ஓடிக், கால் தளர்ந்திடும் என்னை
நமனும் துரத்துவானோ?
அகில உலகங்கட்கும் ஆதார தெய்வமே!
ஆதிகடவூரின் வாழ்வே!
அமுதீசர் ஒரு பாகம் அகலாத சுகபாணி!
அருள் வாமி! அபிராமியே! 11

## பட்டினத்தார் பாடல்

வீற்றிருந்தா ளன்னை வீதி தனிலிருந்தாள்
நேற்றிருந்தா ளின்று வெந்துநீறானாள் - பாற்றெளிக்க
எல்லீரும் வாருங்கள் ஏதென் றிரங்காமல்
எல்லாஞ் சிவமயமே யாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜெயிக்கலாம் வாங்க!

- உனக்கான பாதையை நீயே தேர்ந்தெடுப்பதுதான் சிறந்தது. ஏனெனில், யாராலும் உன் கால்களைக் கொண்டு நடக்க முடியாது.
- ஏமாற்றுவதைக் காட்டிலும் தோற்றுப்போவது மரியாதைக்குரியது.
- தடையெனத் தெரிந்தால் தகர்த்தெறி, வாழ்வில் முன்னோக்கிய பயணம் முக்கியமே தவிர, பாதையைத் தேடுவது முக்கியமல்ல.
- உன் தகுதி பிறருக்குத் தெரியவேண்டுமானால், முதலில் பிறர் தகுதியை நீ தெரிந்துகொள்.
- நம்மைவிடச் சிறியவர்களுடன் பழகினால், மனது இளமையாகும். பெரியவர்களுடன் பழகினால், அறிவு விருத்தியாகும். சமமானவர்களுடன் பழகினால், மகிழ்ச்சி அதிகமாகும்.
- நாளைக்கு நல்ல காரியம் செய்வேன் என்று சொல்பவன் முட்டாள். அறிவுள்ளவன் நேற்றே அதனைச் செய்து முடித்திருப்பான்.
- உன்னை எதிர்க்க எவரும் இல்லையானால், உன் பலம் என்னவென்று உனக்கே தெரியாது! எதிரியை எதிரே வை! துரோகியை தூர வை!
- சிந்திக்கும் போது நிதானமாக சிந்தியுங்கள், செயல்படுத்தும்போது உறுதியோடு செயல்படுங்கள். விட்டுக்கொடுக்கும்போது மனநிறைவோடு விட்டுக்கொடுங்கள்.
- நீ விழுந்த போதெல்லாம் தாங்கிப்பிடிக்கும் இந்தக் கை, மனம் உடையும் போதெல்லாம் தட்டிக்கொடுக்கும் இந்தக்கை, தனியே நீ அழும்போதெல்லாம் உன் கண்ணீரைத் துடைக்கும் இந்தக்கை, அது வேறு யாருமல்ல உன்னுள்ளே உனது தன்னம்பிக்கை, அதை மட்டும் ஒருபோதும் இழந்து விடாதே...!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- உங்கள் வாழ்க்கையில் நீங்கள் சந்திக்கும் ஒவ்வொரு நபரும், உங்களுக்கு ஏதோ ஒன்றை சொல்லித் தருகின்றார். எனவே, நீங்கள் சந்திக்கும் எல்லோரிடமும் கருணையுடன் இருங்கள்.
- உங்களுக்கு எந்த விசயத்தில் திறமை உள்ளதோ, அதிலேயே கவனத்தையும், நேரத்தையும் அதிகம் செலவிடுங்கள். மற்ற விசயங்களுக்காக அதிக நேரம் செலவழிக்காதீர்கள்
- அதிகாலையில் எழப்பழகுங்கள். வாழ்வில் வென்ற பலரும் அதிகாலையில் எழுபவர்களே.
- தினமும் நிறைய சிரிக்கப் பழகுங்கள். அது நல்ல ஆரோக்கியத்தையும், நண்பர்களையும் உங்களுக்குப் பெற்றுத்தரும்.
- நிறைய நல்ல புத்தகங்களைப் படியுங்கள், எங்கு சென்றாலும் ஒரு புத்தகத்துடன் செல்லுங்கள். வீணே காத்திருக்கும் நேரத்தில் வாசியுங்கள்.
- புது மனிதர்களிடமும் தயங்காது பேசுங்கள். அவர்களிடமிருந்து கூட உங்களை ஒத்த சிந்தனையும் நல்ல நட்பும் கிடைக்கலாம்.
- நீங்கள் படிக்கத் தொடங்கும் எல்லா புத்தகமும் முழுவதுமாய்ப் படித்து முடிக்க வேண்டியவை அல்ல. முதல் அரைமணியில் உங்களைக் கவராவிட்டால், அதனை மேலும் படித்து நேரத்தை வீணாக்காதீர்கள்.
- வேள்வி, தர்ம சிந்தனை, ஆன்மீக ஆர்வம், தவம், வாய்மை, மன்னித்தல், கருணை, பிறர் பொருளை விரும்பாமை இந்த எட்டும் நாம் பின்பற்ற வேண்டிய நற்குணப் பண்புகளாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெரும்பாக உத்தியோகத்தரின் உள்ளத்திலிருந்து.....

சண்டிலிப்பாய் கமநல குழுக்களின் தலைவராம்
சிற்றம்பலம் ஐயா அவர்களின்
பாரியார் குலமணியின்
கல்வெட்டுச் சிறப்பிதழில்
நானும் ஒரு பாவினை
நட்புடன் வரைகின்றேன்.
சேவைக்காலத்தில்
தேவைக்கென பழகும் மனிதர்களையே
பாரினில் பார்கையில்
நேரக் கணக்கு பாராது
நேசமுடன் தன்சேவையை
ஆற்றிவரும் சிற்றம்பலம் ஐயாவின்
சுற்றிவரும் பூமியாய் வாழ்ந்த - குலமணி அம்மா;
ஐயாவின் நன் மனையாளாய்
நன் மக்களை ஈன்ற தாயாய்
இச்சமுகத்தின் சிறந்த பிரஜையாய்
ஐம்பது ஆண்டுகள்
வாழ்ந்த சிறப்பை பொன்விழா
கொண்டாடி தின்பண்டங்களால்
எம்மைக் குளிர வைத்து
நீண்ட நாட்கள் ஓடவில்லை
காலன் வந்துவிட்டான்
இருபத்தொன்று சித்திரையில்
இறைவனடி சேர்ந்த ஐயாவின்
பாரியார் ஆத்மா சாந்தியடைய பிரார்த்தித்திடும்

*அன்புடன் - கு. கோகுலன்*
*பெரும்பாக உத்தியோகத்தர்*
*கமநல சேவைகள் நிலையம்,*
*சண்டிலிப்பாய்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆத்மா சாந்தி பெற அந்திரான் முருகனைப் பணிவோம்

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன்
வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்"

எனும் வள்ளுவன் வாக்கிற்கிணங்க திருமதி. குலமணி சிற்றம்பலம் அவர்கள் நவாலி வாழ் மக்களின் மனங்களில் இடம்பிடித்தவர். அமரர் ஆத்மீக சிந்தையுடைய இல்லத்தலைவியாய் திரு. சிற்றம்பலம் அவர்களுடன் வாழ்ந்தவர்.

அந்திரான் முருகனின் திருக்கோவிலில் அவர் தலைவராக, செயலாளராக, பொருளாளராக, நிர்வாகசபை உறுப்பினராக பல பதவிகளை வகிப்பதற்கு உறுதுணை புரிந்து நற்துணைவியாகச் செயற்பட்டவர்.

அதுமட்டுமல்லாது தமது பிள்ளைகளை வழிநடாத்தலில் சிறந்த தாயாகச் செயற்பட்டமை இவரின் தாய்மையின் சிறப்பையும் எடுத்தியம்பும்.

இந்த வகையில் எமது ஆலய பொருளாளரான புவனேந்திரனும் இவ்வழிநடத்தலின் சான்றே ஆகும். ஏனைய பிள்ளைகளும் அந்திரானின் அடியவர்களாகவும் அன்பானவர்களாகவும் பண்பாளர்களாகவும் அறிவாளர்களாகவும் வளர்ந்த பெருமை இவரையே சாரும்.

பிள்ளைகளது வளர்ச்சி கண்டு இன்புற்று கணவனுக்கேற்ற பணிவிடைகளைச் செய்து கொண்டிருக்கையில் குலமணி அவர்கள் எதிர்பாராக விதமாக திடீரென எல்லோரையும் தவிக்கவிட்டுச் சென்றமை ஆறாத் துயரமாகும்.

வாழ்வின் நிலையாமை பற்றி எமது சமயம் சொல்வதை நினைத்து திருமதி. குலமணி சிற்றம்பலம் அவர்களின் ஆத்மா சாந்திபெற அந்திரான் முருகனின் பாதங்களைப் பணிந்து நிற்போமாக.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

"மரணத்தினால் சில கோபங்கள் தீரும்
மரணத்தினால் சில சாபங்கள் தீரும்
வேதம் சொல்லாததை மரணங்கள் கூறும்
விதை ஒன்று வீழ்ந்திடில் செடிவந்து சேரும்"

*அந்திரான் முருகமூர்த்தி கோவில்*
*பரிபாலனசபைத் தலைவர் - பகீரதன்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரங்கல் செய்தி

அந்திரான் பதி அழகனின் அருள்பாலிக்கும் நல்லூராம் நவாலியில் சின்னத்துரைக்கும், செல்லம்மாவிற்கும் முத்த மகளாய் 12.08.1946ம் ஆண்டு வந்துதித்த குலமணி தேவியை இழந்து தவிக்கின்ற குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன். இவர் 27.10.1965ம் ஆண்டு வேலுப்பிள்ளை சிற்றம்பலம் என்பவரை மணமுடித்தார். இதற்கு முன்னரே சமய சமூக தொண்டுகளில் தன்னை முழுமையாக அர்ப்பணித்து செயற்பட்டுக் கொண்டிருந்த திரு.வே. சிற்றம்பலம் என்பவருக்கு பக்கபாலமாகவும், அன்புடனும் அரவணைப்புடனும் பொதுச்சேவைகளில் ஈடுபட வழிசமைத்தார். 1951ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட எமது சனசமூக நிலைய நிர்வாக உறுப்பினராக இருந்து பல நாடகங்கள், பட்டிமன்றங்கள், நகைச்சுவைகள், பேச்சுக்கள் போன்றவற்றில் பங்குபற்றி எமது சனசமூக நிலையத்தின் பெயரை ஊரறியச் செய்தார். இதனால் இவருக்கு கலாபூஷண விருது கிடைக்கலாயிற்று.

சக்தியின்றி சிவனில்லை எனும் பொருள்பட திரு. வே. சிற்றம்பலம் அவர்கள் எமது சனசமூக நிலையப் போசகராகவும், அந்திரான் முருகமூர்த்தி கோவில் பரிபாலன சபை முன்னாள் தலைவராகவும், நவாலி விவசாய சம்மேளன தலைவராகவும், சண்டிலிப்பாய் விவசாய சம்மேளன ஒன்றியங்களின் தலைவராகவும், மானிப்பாய் ப.நோ.கூ.ச நவாலிக்கிளை குழுத்தலைவராகவும் கடமையாற்ற உறுதுணையாக நின்றும் பணியாற்றிய அமரர் சிற்றம்பலம் குலமணி அவர்களின் பிரிவால் துயருறும் கணவர், பிள்ளைகள் மற்றும் உறவினர்களுக்கு ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய அந்திரான் அழகனை வேண்டி நிற்கின்றேன்.

*சி. சிவச்செல்வன்*

*தலைவர்,*

*நவாலி முருகானந்த சனசமூக நிலையம்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரங்கல் செய்தி

முருகானந்த சனசமூக நிலையத்தின் ஆரம்பகால உறுப்பினராகவும் தற்போதைய போசகராகவும், அந்திரான் முருகமூர்த்தி கோவில் பரிபாலனசபையின் முன்னாள் தலைவர்,செயலாளர், பொருளாளராகவும் தற்போதைய நிர்வாகசபை உறுப்பினராகவும், நவாலி விவசாய சம்மேளனத்தின் தலைவராகவும் தற்போது சண்டிலிப்பாய் விவசாய சம்மேளனங்களின் ஒன்றியத்தலைவராகவும் இருந்து நற்பணியாற்றியும் மானிப்பாய் ப.நோ.கூ. சங்க நவாலி கிழக்கு கிளை 6ன் கிளை குழுத்தலைவராகவும் உறுப்பினராகவும் பொதுச்சபைப் பிரதிநிதியாகவும் கூட்டுறவுச் சேவையிலே பங்காற்றியவரும் ஆகிய கலாபூசணம் திரு.வே.சிற்றம்பலம் அவர்களின் அன்பு மனைவியே! குலமணியே! உம் பிரிவுத் துயரம் உம்குடும்பத்திற்கு மாத்திரம் அன்றி எங்கள் எல்லோருக்குமே. உம் பிரிவினை நினைத்து துயருறும் குடும்பத்தினர், உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எனது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதோடு உம் ஆத்மா சாந்தியடைய எம்பிரான் அந்திரான் முருகனை வேண்டிப் பிரார்த்திக்கின்றேன்.

*மா. செல்வராசா*
*மா. ப. நோ. கூ. தலைவர்,*
*ந. தெ. வி.ச. தலைவர்,*
*முதியோர் சங்கத் தலைவர்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 12 - 08 - 1946 | 21 - 04 - 2016 |

நவாலி முருகானந்த சனசமூக நிலைய போஷகர் திரு. வே.சிற்றம்பலம் அவர்களின் துணைவியாரான

## அமரர் சிற்றம்பலம் குலமணி

**அவர்களுக்கு எமது கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்குகின்றோம்**

குடும்பத்தின் குலவிளக்கே எங்கள் குலமகளே

கும்பத்து மண்ணிலும் வயல் வெளியிலும் நீர்நடந்த காலடிச்சுவடுகள்

அழியுமுன்னே விரைந்து வந்து காலனவன் கவர்ந்திட்ட செய்தியென்ன

முருகானந்த நிலைய வழிகாட்டியின் வாழ்க்கைத்துணையானீர்

முருகானந்த நிலைய கணக்குப்பரிசோதகரின் அன்புத்தாயுமாகிநின்றீர்

கண்கள் கலங்கியே நிற்கின்றோம், உம்பிரிவுத்துயர் தாங்காமல்

எட்டுத்திக்கும் தேடிவிட்டோம், உங்கள் திருமுகம் காண முடியவில்லை

விடைகொடா உறவுகளிடம் நீர் விடை பெற்றுச் சென்றுவிட்டீர்

அந்திரான்பதி அழகனை வேண்டுகின்றோம் உங்கள் ஆத்மா சாந்தியடைய.

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கும், உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொண்டு அவரின் ஆத்மா சாந்தியடைய ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நவாலி கிழக்கு,
மானிப்பாய்.

முருகானந்த சனசமூக
நிலையம்

ரூபன் பிறின்டேர்ஸ், ஆனைக்கோட்டை, யாழ். 021 225 5568



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது அலுவலக நிலையப்பொறுப்பு நன்னடத்தை உத்தியோகத்தர் திரு சிற்றம்பலம் புவனேந்திரன் அவர்களின் அன்புத்தாயாருக்கு எமது

# கண்ணீர் அஞ்சலிகள்



பிறப்பு - 12.08.1946 இறப்பு - 20.04.2016

# திருமதி சிற்றம்பலம் குலமணி

**ஆலம் விழுதுகள் போல் ஆயிரம் சொந்தங்களுடன்**
**குடும்ப உறவுகள் வீழ்ந்துவிடாது இருக்க**
**வேரென இருந்தீரே தாயே**
**மாயப்புயல் வடிவில் காலனவன் இன்னுயிர் பறிக்க**
**சோகத்தை தந்துவிட்டு சொல்லாமல் சென்றதென்ன**
**நல்வழிகள் காட்டி எம் சமூகத்திற்கு ஒளி கொடுத்த**
**தீபமே உங்கள்**
**ஆத்மா சாந்தி பெற இறைவனை பிரார்த்திக்கின்றோம்.**

அன்னாரின் பிரிவால் குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக்கொள்கின்றோம்.

ஓம் சாந்தி ! ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !

மாவட்ட நன்னடத்தை அலுவலகம்.
மாங்குளம்
முல்லைத்தீவு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



பிறப்பு
**12.08.1946**

இறப்பு
**21.04.2016**

சண்டிலிப்பாய் சுமநல சேவைகள் நிலைய குழுத் தலைவர்
திரு.வே.சிற்றம்பலம் அவர்களின் அன்பு மனைவி

அமரர்

## திருமதி.சிற்றம்பலம் குலமணி

(நவாலி கிழக்கு, மானிப்பாய்)

நெஞ்சுடர் நிலவொன்று
செந்தணல் மீதுதான் விழுந்ததுவோ!
நேசமுறு உறவு எங்கேதான் போனதென்று
நெஞ்சமது துடிக்கிறது வலி தாங்காது...

கரம் கொண்டு வரவேற்பாய்
வரம் கொண்டு நீ கேட்பாய் அம்மா
பரம் கூட சாய்கிறதே நின் பிரிவால்

உயிர் ஒன்று அவனிதாண்டித் தான்
உறவுகள் பல கூடுமோ பவனியாய்
மனிதருக்கு மரணம் இறுதி
மனத்தளவும் மறக்காதே இது நியதி...!

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

துயர் பகிரும்...
**சுமநல சேவைகள் நிலைய**
**சமூகம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் பூக்கள்

அன்னை மடியில் 12 . 08 . 1946



இறைவன் அடியில் 21 . 04 . 2016

பாரி
சண்டிலிப்பாய் கமநல சேவைகள் நிலைய தலைவரின் அன்பு[redacted]யார்

## அமரர் திருமதி குலமணி சிற்றம்பலம்

மறைந்தவர்கள் எல்லோரும் மண்ணாவதில்லை!
மாறாக..... மறைந்தும் மறையாத சூரியனாய்
எம் மனதில் என்றும்
அழியாது வாழ்பவர்கள் சிலர் உள்ளார்.....
அவர் வரிசையில் சிலையானீர் -உமக்காய்
தலை வணங்குகிறோம்!
இறைவனின் அன்பினை அனுபவிக்க
எண்ணினீர்களோ?
அறத்தோடும் அன்போடும்
நடத்திய அழகான உங்கள் உறவுகளை
அழவைத்து விட்டு ஆண்டவனை
அடைய என்ன அவசரமோ?......

*அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.*

உடுவில் கமநல சேவைகள் நிலைய சமூகமும்
கமக்காரர் அமைப்புக்களும்

உடுவில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் காணிக்கை

மலர்வு
1946 . 08 . 12



உதிர்வு
2016 . 04 . 21

**சோகத்தின் சுமையதனை**
**சுமக்கின்றோம் இதயமதில்**
**பாசத்தின் உறவுகள் நாம்**
**பரிதவித்து வாடுகின்றோம்**
**நேசத்தை மறந்து ஏன்**
**நெடுந்தூரம் சென்றீர்களோ!**

*அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு*
*ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு*
*அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.*

சண்டிலிப்பாய் கமநல சேவைகள் நிலைய தலைவரின் அன்பு மனைவியார்

அமரர் திருமதி
**குலமணி சிற்றம்பலம்**

உரும்பிராய்

உரும்பிராய் கமநல சேவைகள் நிலைய சமூகமும்
கமக்காரர் அமைப்புக்களும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் காணிக்கை

பிறப்பு

1946 . 08 . 12



இறப்பு

2016 . 04 . 21

சண்டிலிப்பாய் கமநல சேவைகள் நிலைய தலைவரின் அன்புப் பாரியார்

## அமரர் திருமதி குலமணி சிற்றம்பலம்

**பாசத்துடன் பழகி இன் சொல் பேசி**

**எல்லோருக்கும் இன் முகம் காட்டி**

**மகிழ்வோடு வாழ்ந்தின்று;**

**வானுலகம் நீர் செல்ல,**

**உங்கள் உதிரத்தின் உறவுகள் தவித்தே கதறியழ,**

**உற்றமும் சுற்றமும் உங்கள் பிரிவால் கதறுதம்மா!**

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு
எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன்,
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யாழ் மாவட்ட கமக்காரர் அமைப்புக்களின்
அதிகார சபையும் கமநல அபிவிருத்தி சமூகமும்
யாழ்மாவட்டம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விழிநீர் அஞ்சலி



மலர்வு
12.08.1946

உதிர்வு
21.04.2016

சண்டிலிப்பாய் வட்ட விவசாய சம்மேளனத் தலைவரும், நவாலி அந்திரான் முருகமூர்த்தி கோவில் முன்னாள் நீண்டகால தலைவரும், கூட்டுறவாளருமான கவிபூஷணம் திரு. வே.சிற்றம்பலம் அவர்களின் துணைவியாரான

## அமரர் சிற்றம்பலம் குலமணி (குலம்)

அவர்களுக்கு எமது கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்குகின்றோம்

அன்போடு அறிவும் பண்போடு பாசமும்
பக்குவமாய்ச் சேர்த்து வாழ்ந்தவரே........
காலமது நிறைவெய்த கடவுளவன் கரம் நீட்ட
கடமைகளை முடித்துநின்று கடவுளடி சேர்ந்தனையோ?
உம் பிரிவால் துயருறும் உம் உறவுகள் அனைவரும்
ஆறுதல் அடைய இறைவனை வேண்டி
அன்னவரின் ஆத்மா ஆண்டவனடியில்
அமைதியுற வேண்டுகின்றோம்.

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கும், உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொண்டு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நவாலி

**மா. செல்வராசா**
(மானிப்பாய் ப.நோ.கூ.ச ங்க தலைவர்,
நவாலி தெற்கு விவசாய சம்மேளன தலைவர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் துளிகள்

அமரர்

## சிற்றம்பலம் குலமணி



பிறப்பு: 1946.08.12
இறப்பு: 2016.04.21

குடும்ப குலவிளக்காய் ஒளி வீசினீர்.
குடும்ப விருட்சம் செழித்தோங்க
ஆணிவேராய் நீர் இருந்தீர்!
இன்று ஏன் திடீரென்று
எம்மை பிரிந்தீர்?
ஆணிவேர் அறுந்த விருட்சமாய்
கலங்கி நிற்கும் குடும்பத்தார்க்கு
எமது ஆழ்ந்த அனுதாபங்களை
தெரிவிப்பதோடு ஆத்ம சாந்திக்கு
பிரார்த்திக்கின்றோம்!

**ஐ.ரதீஸ்வரன்**
**ஐ.யோகேஸ்வரன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெரு"மை"க்குத் தேவையானவை

1. உயிர் போக நேர்ந்தாலும் - நீ பேச வேண்டியது

*உண்மை*

2. மற்றவருடன் பேசும் போது - உன்னில் கலந்திருக்கவேண்டியது

*இனிமை*

3. வெற்றி பெற என்றும் - நீ ஒழுக வேண்டியது

*ஒற்றுமை*

4. கனவிலும் நனவிலும் - நீ செய்ய வேண்டியது

*நன்மை*

5. உறுதியான வாழ்விற்கு - என்றும் உன்னில் வேண்டும்

*எளிமை*

6. இறுதி மூச்சு உள்ளவரை - நீ மீறாதே உன்

*கடமை*

7. வெற்றிக்கும் உயர்ச்சிக்கும் - உன்னில் வேண்டும் என்றும்

*வல்லமை*

8. உன்னையே நீ சிந்தித்தறிய - நீ அடிக்கடி பெறவேண்டும்

*தனிமை*

9. காலமெல்லாம் சிறப்புடன் வாழ - நீ அணிய வேண்டியது

*பொறுமை*

10. இவ்வாறு நீ ஒழுகிவிட்டால் - நாளை நீ பெறுவது

*பெருமை*




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவில்கின்றோம்...


நான் எனது என வாழாது தன் குடும்பம் மட்டும் என எண்ணாது அனைவருக்கும் அன்பு செய்யும் எமது குடும்பத்தலைவி அமரர் குலமணி சிற்றம்பலம் அவர்கள் இறையடி சேர்ந்த அதிர்ச்சியுறும் செய்தியறிந்து எம்மைத்தேடி ஓடோடி வந்து நாம் செய்வதறியாது திகைத்து நின்ற வேளை எமக்கு ஆறுதல் கூறி நாம் அன்னாரின் அடுத்த கடமைகளை ஆற்றுவதற்கான நிலைக்கு எம்மைத்தேற்றி இன்று வரைக்கும் எம்மோடு கூட இருந்து எமக்கு பல வழிகளிலும் உதவிய எமது சொந்தங்கள், நண்பர்கள், அயலவர்கள் ஆகியோருக்கும், வவுனியா, மன்னார், மட்டக்களப்பு போன்ற பல ஊர்களில் இருந்து வந்து ஊருக்கு வந்து எமது சோகத்தில் கலந்து கொண்டவர்கள், ஆறுதல் சொன்னவர்கட்கும், நம்துயரில் பங்குகொண்ட நம் ஊர்ப் பெரியோர்கள், ஆத்மசாந்தி பிரார்த்தனை ஆற்றியவர்கள், இறுதிச் சடங்கினை நடத்திய குருமார்கள் மற்றும் துண்டுப்பிரசுரம், பதாகைகள் மூலமாக தமது அனுதாபத்தினைத் தெரிவித்து எமது சோகத்தில் பங்கேற்றுக்கொண்ட ஏனையோருக்கும், உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் இருந்து தொலைத்தொடர்புகளுடாக எம்மைத் தேற்றியவர்களுக்கும் இச்சோக நிலையில் நாம் தவறுதலாக தவறவிட்டுச் சென்றுவிட்ட எம்மைத் தேற்றி எமக்குதவிய அனைவருக்கும், மற்றும் இம்மலரை சிறந்த முறையில் அச்சிட்டு உதவிய றூபன் பிறிண்டேர்ஸ் (ஆனைக்கோட்டை) நிறுவனத்தாருக்கும் எங்கள் இதய பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நன்றி.



**இங்ஙனம்,**
**குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org